விலை 2 அணா

திராவிடநாடு

REGD M 4444

ஆண்டு சந்தா 7 இலங்கை 15 சதம் மலாய் நாடு 12 காசு

பாசீசம்

—※—

"எங்கும் வளர்ந்து வரும்பாசீசமனே பாவமே நாட்டின் முக்கிய பிரச்னையாகப் போய்விட்டது. மதத்தையோ, வேறு எதனையோ அடிப்படையாகக் கொண்டு சில மாகாணங்களில் உள்ள பெரும்பான்மையோர், அங்கங்குள்ள சிறு பான்மையோரை அழிக்க விரும்புகின்றனர் இன்னும் சில மாகாணங்களில், அறிவு, ஆற்றல், பணபலம் முதலிய ஏதாவது ஒன்றையுடைய சிறு பான்மையோர் அவ்விடத்திலுள்ள பெரும் பான்மையினரைத் தொலைக்க முற்படுகின்றனர்."

கிருஷ்ணமேத்தாப்-
(ஒரிசா பிரதமர்)

மலர் 6] 8—6—47 [இதழ் 2

16-ம் பக்கத் தொடர்ச்சி

வீழ்கிறோம் — வேண்டாம்—தயவு செய்க-எல்லாம் அறிந்தவரே! ஏழைகள்பால் இரக்கம் காட்டுக, என்று எவ்வளவு கெஞ்சியிருப்பர்.

வி :- என்னப்பா, அக்ரமம். அலறித்துடித்து அழுதுபுரண்டுதான் இருப்பர். கல்லும் உருகுமே அந்தக் கூக்குரலைக் கேட்டால்...............

இ :- ஆம்! முனிவரே! கல்லும் உருகும், ஆனால் இந்த நல்லவர்பட்டும் உருகவில்லை. தேடினார் மேலும் பலரை.

ப :- இவ்வளவு பேரைக் கொன்றும் ஆத்திரம் அடங்கவில்லை?

இ :- பக்தி தலைக்கேறிவிட்டதே! பாபம்! வெட்டுண்ட தலைகளைக்கண்டார்-இரக்கம் எழவில்லை—இன்னும் வெட்டப்படவேண்டியதலை உண்டா என்று தேடினார் இந்தமகானுபாவர். கம்பரே! இவர் அரக்கரல்ல! அரன் அடியார்! ஒரே ஒரு குழந்தையைக் கண்டார்....................

ப :-ஓஹோ! அந்தக்குழந்தையின் முகத்தைக்கண்டு இரக்கம் பிறந்ததோ— (விசுவாமித்திரரைப் பார்க்கிறார்)

இ :- இல்லை! கோபம் வந்தது! அந்தச்சிசுவையும் இந்தச்சிவபக்தர்கொல்லக்கிளம்பினார்.

வி :- குழந்தையைக்கொல்ல........

இ :- ஐயா! வேண்டாம். மற்றவர்கள் சிவ சொத்தைத் தின்றார்கள் என்று கொன்றுவிட்டீர். இச்சிசு அக்குற்றமும் செய்யவில்லையே. கொஞ்சம் இரக்கம் காட்டும், இக்குழந்தையைக்கொல்லாதீர், என்று வேண்டிக் கொண்டனர்.

வி :- வேண்டிக்கொள்ள........

இ :- சிவபக்தர், சீற்றம் தணியாதவராய் இச்சிசு, அதன் தாய்ப்பாலைக் குடித்திருக்குமன்றோ — அந்தப் பாலிலே சிவசொத்து கலந்திருந்ததன்றோ—ஆகவே சிசுவும் கொல்லப்படத்தான் வேண்டுமென்று கூறி, சிசுவைத்தூக்கி மேலுக்கு எறிந்து, கீழே விழும்போது, இடையிலே வாளை, ஏவி, குழந்தையை இரண்டு துண்டு ஆக்கினார். இரக்கமற்று, இறைவனின் நற்தொண்டன் என்று தன்னைக் கூறிக்கொண்டு. இரக்கமற்ற இவர் அரக்கரல்ல-கம்பரே! நான் அரக்கன். கேட்டால் என்ன சொல்லுவார்— பக்தி அதனால் செய்தேன் என்பார். பக்தியின் பேரால் படுகொலை செய்தேன் என்பார். பக்தியின் பேரால் படுகொலை செய்தார்— காரணம் எதுவோ கிடக்கட்டும் — நடந்தது படுகொலை—இரக்கம் இருந்ததா? துளி? பெண்கள் அழுதபோது? பால் வடியும் முகமுடைய சிசு கதறிய போது? இருந்ததா - இரக்கம்காட்டப்பட்டதா — கோட்புலியாரே! இரக்கம் காட்டினீரா? இரக்கமற்றுப்படுகொலை செய்தவர், நாயனார்—அடியார் — கொலைக்கஞ்சாக்கோட்புலி! கட்டைவிரலை காணிக்கையாகப் பெற்ற துரோணர்—தாயின் தலையை வெட்டிய தரும சொரூபி பரசுராமன்—பெற்றெடுத்த குழந்தையையும் பிரியத்தை அர்ப்பணித்த காதலியையும் இரக்கமின்றி கைவிடத்துணிந்த விசுவாமித்திரன்—இவர்களெல்லாம் தவசிகள் — ரிஷிசிரேஷ்டர்கள்-பரமன் அருளைப்பெற்றவர்கள் — நீதி தேவா! நான் அரக்கன் — இவர்கள் யார்? — என்னை விசாரிக்கக்கூடிடும் அறமன்றத்திலே இவர்கள் காப்பாளர்களாம். இரக்கமற்ற இவர்கள் இருக்கவேண்டிய இடம் இதுவா? குற்றக்கூண்டில் இருக்கவேண்டியவர்கள்! நீதிதேவா! அறம் — அன்பு —எதுமறியாத இவர்கள், அறநெறி காப்பாளர்களா!

(கோபத்துடன், கூண்டைவிட்டு இறங்கிச்சென்று)

(அறநெறி காப்பாளர்கள் இருக்கும் இடத்துக்குச்சென்று)

இரக்கமற்ற இவர்கள் இருக்க வேண்டிய இடம் இதுவா?—

(ஆசனத்தைப் பிடித்தாட்டி அவர்கள் அலறுகிறார்கள்)

நீதிதேவன் மீண்டும் மயக்கமடைகிறார். கம்பர், பயந்து, அவசரமாக வெளியே செல்லப் பார்த்துக் கால் இடறிக்கீழேவீழ்கிறார். இராவணன் சென்று அவரைத் தாங்கிப்பிடித்துக் கொண்டு, வெளியே அழைத்துச் செல்கிறான்.

❋

5 உண்மைகள்!
1 குரு மருந்துகள் ஆங்கிலம்—தமிழ் முறை கலந்தது.
2 குரு மருந்துகளின் குணங்களை, லண்டன், அமெரிக்க கெமிகல் சொசைட்டியாரும் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.
3 குரு மருந்துகளில்
குரு தைலம் 1—8—0
குரு பற்பொடி 0—5—0
4 குரு மருந்துகளே குடும்ப பொக்கிஷம்
5 குருமருந்துகளை உங்கள் ஊர் மருந்து-ஷாப் வியாபாரிகளிடம் கேளுங்கள்.
டாக்டர் எ. மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை,
திருச்சிராப்பள்ளி.

மறைவு

பிரபல நாதஸ்வர வித்துவான் தோழர் குளிக்கரை K. S. பிச்சையப்பா அவர்களின் தந்தையார் சேதுப் பிள்ளை அவர்கள் சின்னாட்கள் நோய் வாய்ப்பட்டிருந்து கடந்த 24—5—47 ல் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தியை வருத்தத்துடன்தெரிவித்துக் கொள்வதோடு, அவர் பிரிவால் வருந்தும் தோழர் பிச்சையப்பா அவர்கட்கும் அவரது உறவினருக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

நீதிதேவன் மயக்கம்

கட்டம் 2

["இரக்கமெனும் ஒருபொருளிலா அரக்கன்"—இது கம்பரின் குற்றச்சாட்டு.

"அரக்கர் பட்டியலில் சேர்க்கப்பட்டோர், இரக்கமற்றவர் அல்லர். நீதி நிலைமைக்குக் கட்டுப்பட்டது"—இது இராவணன்வாதம்.

முதல் கட்டத்தில், அறமன்றத்திலே, இராவணன், கம்பன் இருவரின் வாதப் பிரதிவாதமும், சாட்சிகளும், நடைபெறுகின்றன. இரண்டாம் கட்டத்தில் இராவணன், அறமன்றத்திலுள்ள அறநெறிகாப்பாளர்களுக்கு, தன் நிலைமையையும், வழக்கின் விளக்கத்தையும் தெரிவிக்கிறான் அதுஇது.]

காட்சி 1.

இடம்:- தேவலோகம் அறமன்றம்.

இருப்போர்:-

நீதிதேவன்

இராவணன்

கம்பன்

அறநெறி கூறுவோர்.

[இராவணன் கெம்பீரமாக உலவிக்கொண்டு பேசுகிறான். நீதிதேவனின் முகத்திலே, பயமும் சோகமும் நன்றாகப் படிந்திருக்கிறது. கம்பர் அறநெறி கூறுவோரைப்பார்த்துப் புன்னகை புரிகிறார். அவர்களின் முகத்திலேயும் கவலைக்குறிகள் காணப்படுகின்றன.]

இ:- தேவா! பேசியசாட்சிகள்—இங்குவந்து பேசாத சாட்சிகளைவிடக் குறைந்த அளவுதான், எண்ணிக்கையில். நான், மேலும், சாட்சிகளை அழைக்கப்போவதில்லை.

க:- [எழுந்துநின்று நீதிதேவனுக்கு மரியாதை தெரிவித்துவிட்டு]

உண்மைக்கு, சாட்சிதேவையில்லை—வைரத்துக்கு பளபளப்புத்தரவேண்டியதில்லை—அமிர்தத்துக்கு இனிப்புக் கூட்டத்தேவையில்லை — அழகுக்கு அலங்காரம் தேவையில்லை—

இ:- (கேலியாக்) பாம்பின் பல்லுக்கு விஷம் தேவையில்லை—ஏராளம் அதனிடமே.

நீ:- கம்பரே! உவமைப் பூங்காவில் உலாவ நேரமில்லை. என்ன உரைக்க எண்ணுகிறீர்?

க:- நான், என் வாதத்துக்குத் துணைதேட, சாட்சிகளை அழைக்கப் போவதில்லை, உண்மையின் உருவத்தைத் தெளிவுபடுத்த, நீதிதேவனின் திருச்சபையிலே அவசியமில்லை—தங்கள் திருப்பார்வைக்கு, உண்மை ஏற்கனவே நன்கு தெரிந்தே இருக்குமாகையால்.

நீ:- அதாவது, சாட்சி இல்லை.

க:-அவசியமில்லை............

நீ:- அது, நான் கவனித்துக் கொள்ளவேண்டிய விஷயம்—அவசியமா அல்லவா என்பது—சாட்சி இல்லை என்று மட்டும் நீர் கூறலாம்.

க:- ஆமாம் நீதிதேவா! சாட்சி இல்லை—அதாவது............

நீ: இலங்கேசன், பேசலாம்.

இ:- வழக்கின் முடிவுபற்றிய கவலையற்றே நான் இதிலே கலந்து கொள்கிறேன் என்பதை முதலிலேயே கூறிவிட்டேன். காரணம், நீதிதேவனிடம் மதிப்புக்குறைவு அல்ல. நீதிதேவனும், ஏற்கனவே தயாரிக்கப்பட்ட, ஏதோ ஓர் கட்டுத்திட்டத்துக்கு உட்பட்டே, வேலை செய்பவர். அவரிடம் உள்ள துலாக்கோல் அவர் செய்தது அல்ல! படிக்கற்கள், அவருக்குத்தரப்பட்டவை! இவைகளின் துணைகொண்டு நீதிதேவன், நிறை பார்க்கிறார். நான், அவருடைய நிறைபார்க்கும் குணத்தைச் சந்தேகிக்கவில்லை. அந்தத் துலாக்கோலையே சந்தேகிக்கிறேன்! படிக்கற்களையே சந்தேகிக்கிறேன். எனக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்க வேண்டுமானால், நீதிதேவனின் உள்ளம் திருப்தியாவது மட்டும் போதாது—அவர்—தம்மிடம் தரப்பட்டுள்ள துலாக்கோலையும், படிக்கற்களையும், தூக்கி எறிந்துவிட்டு வழக்கின் சகல அம்சங்களையும்தாமாகச்சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். இதற்கு—நீதிதேவனுக்கு நல்லெண்ணம் இருந்தால் மட்டும் போதாது—உள்ளத்தில் உரம் வேண்டும்.

[நீதிதேவன், தலையைத்தொங்கவிட்டுக் கொண்டிருக்கக் கண்ட கம்பர் கோபமாக எழுந்து]

க:- இலங்காதிபதி, வழக்குமன்றத்தையே அவமதிக்கிறான்—அவமதிக்கிறார்—

இ:- (கம்பரைநோக்கிக்கேலியாக) நான் கவியல்ல, குழைய, கெஞ்ச. நான் இப்போது எடுத்துரைத்தது வாய்மை—என் அகராதிப்படி—

நீ:- [தலையை நிமிர்த்தி இலங்கேசனைக் கெம்பீரமாகப் பார்த்து]

இலங்காதிபனே! ஆளுக்கேற்றபடி, வேளைக்கேற்றபடி, வழக்குக்கேற்றபடி, துலாக்கோலையும் படிக்கற்களையும் மாற்றுவதும், புதுப்பிப்பதும் என்ற நிலைபிறந்தால், என்ன கதியாகும் நீதி?

இ:- அதற்கு அஞ்சி, காலச்சுமை வீழ்ந்து வீழ்ந்து சாய்ந்து போன துலாக்கோலில், தேய்ந்து போன படிக்கற்களைப் போட்டு, நிறைபார்ப்பது, நீதியாகுமா, தேவா!

நீ:- (சற்றுகோபத்துடன்) சாய்ந்த தராசு! தேய்ந்தபடிக்கற்கள்! முதன் முறையாக இம்மன்றத்தின் முன் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள்.

இ:- இதுதானே நீதிதேவா, முதல்புனர்விசாரணை! நான் பேசினேன் முதலில், பிறர்பிறகு பேசுவர். முடிவு என்ன? கவலை இல்லை! மறுவிசாரணை வந்ததே அதுபோதும் தேவனே! மாசு, நீதிமன்றத்துக்கும் உண்டு, அளிக்கப்பட்ட தீர்ப்புகளெல்லாம், மாற்ற முடியாதன அல்ல என்றபல புது உண்மைகள் ஏற்பட்டுவிட்டன அல்லவா—அதுபோதும். என்களிப்புக்குக் காரணம் அதுதான்.

[நீதிதேவன்கோபமாகஎழுந்து]

நீ:- பிறகு கூடுவோம்.

[சபை கலைகிறது]

காட்சி 2.

[மீண்டும் அறமன்றம் கூடுகிறது.]

இடம்:- அறமன்றம்.

இருப்போர்:- அறநெறி கூறுவோர் அறுவர், இலங்காதிபன், நீதிதேவன், கம்பன்.

[கம்பரும் நீதிதேவனும் வருகின்றனர். ஒருவருக்கொருவர், நமஸ்கரித்துக் கொள்கின்றனர். நீதிதேவன் அமர்ந்ததும், இலங்காதிபன் பேசுகிறான்]

இ:- (அறநெறி கூறுவோரை நோக்கி)

நீதிதேவனுக்குத் துணைநிற்கவந்துள்ளோரே! அறவழி கண்டுரைக்கும் அறிஞரே! உமக்குச் சிலசொற்கள். இரக்கமற்றவன் நான், எனவே அரக்கன்; இந்தக் கம்பஇலக்கணத்தைநான் மறுக்கிறேன். கடமை, தவம், தொழில், வாழ்க்கைச்சிக்கல் முதலிய பல கொள்ள வேண்டிய போது, இரக்கம் காட்ட முடியவில்லை, முடியாது, கூடாது-இதற்கு ஆதாரங்கள் ஏராளம்.

மாசற்ற மனைவிமீது. அவசியமற்றுச் சந்தேகிக்கிறான் கணவன். அதுவே அறமாகாது. இந்தக் கணவன், செயலிலேயே இறங்கி, தன் மனைவியைக் கொல்லும்படி கட்டளை பிறப்பிக்கிறான் — அது கொடுமை, அநீதி.

[விசுவாமித்திரர், அப்போது பரசுராமனைக் கேலியாகப் பார்க்கிறார். பரசுராமர் தலைகவிழ்ந்து கொள்கிறார்]

அக்ரமம் அந்த அளவோடு நிற்கவில்லை. அறநெறி உணர்ந்தோரே! அநியாயமாகத் தன் மனைவியைக் கொல்லத்துணிந்த அந்தக் கணவன், தன்மகனையே ஏவினான்—தாயைக் கொல்லும்படி. மகனை ஏவினான்—பெற்றெடுத்த தாயை........

ப:- (கோபத்துடன்) போதும், அந்தப்பழங்கதை.

வி:- (நீதிதேவனைப்பார்த்து சாந்தபாவனையில்) குற்றவாளிக் கூண்டிலே நிற்பவன், தன்முழு வாதத்தையும் கூற நாம் உரிமை தருவதே முறை- (பரசுராமனைப் பார்த்து) தடுக்க வேண்டாம். (இராவணனைநோக்கி) தாயைக் கொல்லத் தனயனை ஏவிய ....கூறும், இலங்காதிபா! மேலால் கூறும்........தாயைக்கொல்ல தனயனை ஏவிய.......

இ:- தருமசொரூபி! இதோ இருக்கிறாரே (பரசுராமனைக்காட்டி) இவருடைய தாப்பனார் ஜமதக்னிதான்! அக்ரமககாரத் தந்தையின் ஆற்றலுள்ள மகன் இவர்! மகரிஷியே! தாயின் தலையை வெட்டினீரே, தகப்பனாரின் கட்டளையைக் கேட்டு; அப்போது இரக்கம் எந்த லோகத்துக்குக் குடியேறிற்று. இரக்கமற்ற நான், அரக்கன்! அறநெறி காப்பாளர் இவர்!

ப:- (கோபமாக)

துஷ்டத்தனமாகப் பேசும் உன் நாவைத் துண்டித்துவிட எவ்வளவு நேரம் பிடிக்கும்! (எழுந்து நின்று) எவ்வளவு திமிர்! மமதை! (நீதிதேவனைப்பார்த்து) நீதிதேவா!

இ:- (பரசுராமனைக் கேலியாகப் பார்த்தபடி) ஆமாம், தவசியாரே! நாக்கைத் துண்டித்துவிடும்—இல்லையானால், பலப்பல விஷயம் அம்பலத்துக்கு வந்துவிடும். பாசம், பந்தம் இவைகளை அறுத்துக்கொள்ள முடியாவிட்டாலும், தவச்சிரேஷ்டர்களான உமக்கு, நாக்கறுக்க, மூக்கறுக்க நன்றாகத் தெரியுமே — செய்யும்—

[நீதிதேவன், எழுந்திருந்து பரசுராமனை, ஜாடை காட்டி உட்கார வைக்கிறார்.]

வி:- (சமாதானப்படுத்தும் முறையில்) பரசுராமரே! கோபம் கொள்ளாதீர். இராவணன் உம்மைக்குறை கூறுவதாக அர்த்தமில்லை. இரக்கம் காட்டாது இருந்தவர்கள் நான் மட்டுமல்ல—பலபேர்உண்டு — வேறு வேறு காரணத்துக்காக என்பதை விளக்கத்தான், தங்கள் தாயாரின் சிரத்தைத் தாங்கள் கொய்தகதையைக் கூறினர், என்று நினைக்கிறேன்.

ப:- (ஆத்திரத்துடன் எழுந்து) ஓய்! விஸ்வாமித்ரரே!

வி:- பொறுமை, பொறுமை! நீதிதேவா! இவ்வளவு தொல்லையும் தங்களால் வந்தது.

நீ:- முனிபுங்கவரே! என்மீது என்ன தவறு? பரசுராமர், தன் தாயின் தலையை வெட்டியது, ஜமதக்னி கட்டளையால். இலங்கேசன், பரசுராமருக்கு இரக்கம் இல்லை என்று குற்றம் சாட்டினான். என் மீது மாசு இல்லையே!

வி:- உமக்கும் தெரியுமே, இரக்கமற்ற செயலைச் செய்தவர் இந்தப் பரசுராமர் என்று. அப்படி இருக்க, எப்படி அவரை அறநெறிகாப்பவராகக்கொண்டீர்! தவறல்லவோ அது?

ப:- (கோபமாக) ஓய், விசுவாமித்ரரே! உம்முடைய யோக்யதையை அறியாமல் என்னை நீதிதேவன்சபையிலே இழிவாகப் பேசிவிட்டீர்.........

வி:- இழிவு ஏதும் பேசவில்லை, ஸ்வாமி! உண்மையை உரைத்தேன்.

ப:- (ஆத்திரம் பொங்கி எழுந்து) நானும் கொஞ்சம் உண்மையை உரைக்கிறேன் கேளும். ஜடாமுடிதாரி ஒருவர், ஐம்புலன்களை வென்றவர்—தேவரும் மூவரும் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரவேண்டும் தம் எதிரே என்று ஆசைகொண்டு அகோரத்தவம் செய்தவர் — (அனைவரும் விசுவாமித்ரரைப் பார்க்கின்றனர்) அப்படிப்பட்டவர் — கேவலம் ஒரு கூத்தாடிப் பெண்ணின் கோலாகலத்திலே மயங்கி, தவத்தைக்கைவிட்டு, அவளுடன்...........

வி:- மூவரும், மன்மதபாணத்தின்முன், அதுபோலப் பரதவித்ததுண்டு, பரசுராமரே! மேனகையின் மோகனரூபத்திலே நான் இலயித்தது பெரியகுற்றமென்று கூறுகிறீர்- இதுசகஜம்—

ப:- (கேலியாக) மேனகையின் மோகனம்! (கோபம் கலந்து) வேத வேதாந்தத்தின் இரகசியத்தை அறிந்து ஜீவன் முக்தராக விளங்கிட வேண்டியவருக்கு, மேனகையின் விழியிலே வழியும் அழகுபற்றி என்னய்யா கவலை? (மற்றவர்களைநோக்கி) அவள் அதரம் துடித்தால் இந்தத் தபோதனரின் யாகயோகம் துடிக்க வேண்டுமா — தாங்கவேண்டுமா— இதுவா யோக்யதை. (குரலைமெல்லியதாக்கி) ஆனால் நான் அதைக் கூடக் குற்றமென்று கூறவில்லை. (சோகக்குரலில்) மேனகையிடம் குலவினீர். குழந்தை சாகுந்தலம் பிறந்தாள்—விழியிலே களிப்புடன், அந்தக் குழந்தையைக் கையிலேந்திக் கொண்டு, தேவமாது மேனகை, உம் எதிரேவந்து நின்று, பிரியபதே! இதோ நமது இன்பம்! நமது கனி! என்றுகூறி ஆதரவு கோரியபோது, (குரலை மெள்ள மெள்ள உயர்த்துகிறார்) எவளுடன் கொஞ்சி விளையாடி பஞ்சபாணனை வென்றீரோ, எவளுடைய அன்பைக்கோரிப்பெற்றீரோ, எவளுக்காக, கனல் கிளம்பும் யாககுண்டத்தை விட்டு நீங்கி, புனல் விளையாட்டுக்குக் கிளம்பி, புளகாங்கிதமடைந்தீரோ, அந்த அழகுமேனகையை வெறுத்தீர், அழவைத்தீர்—தவிக்கச் செய்தீர்—வேதனைப்படுத்தினீர்—குழந்தை சகுந்தலையை ஏற்றுக்கொள்ள மறுத்தீர்—கையாலே தொடமறுத்தீர்—கண்ணாலே பார்க்கவும் முடியாது என்றீர்—காதலுக்குத்தான் கட்டுப்படவில்லை — ஒழியட்டும்—காட்டு வாசத்தின் காரணமாக அந்தக் குணம் இல்லை என்று கூடவிட்டு விடுவோம்—குழந்தை—சந்திரபிம்பம் போன்ற முகம்—பொன் விக்ரகம் — அந்தக்குழந்தையின் முகத்திலே தவழ்ந்த அன்புக்காவது கட்டுப்பட்டீரா? ஓய்! புலியும் அதன் குட்டியை அன்புடன்

(13-ம் பக்கம் பார்க்க)

ஏர்முனை



"தெய்வமே! என் மகளை ஏன் இவ்வளவு அழகுடன் பிறக்கச் செய்தாய்? பக்கத்து வீட்டுக்காரரின் மகளுக்கு இருப்பது போல, பொட்டைக் கண் இருக்கக் கூடாதா? பாழும் பெண், பத்தரை மாத்துத் தங்கம்போல இருக்கிறதே! அவள் அழகு வளர வளர, என் அடிவயிற்றிலே நெருப்பு மூண்டு விடுகிறதே!"

மகள் அழகாக இருப்பது கண்டு, கலங்கிக் கதறும் தந்தையின் பேச்சு, மேலே, பொறித்திருப்பது.

இப்படியும் உண்டா? மகள் மனோகரியாக இருக்கக் கண்டால், தகப்பன், தேம்புவானேன்? அவன் என்ன, பித்தனோ? என்று கேட்கத் தோன்றும் உங்கட்கு.

அவன் பித்தனல்ல; ஏழை! ஏழை வீட்டிலே, அழகான பெண்!!—ஆம்!

இருக்கட்டுமே! ஏழை வீட்டிலே எழிலுடைய பெண் இருந்தால் என்ன ஆபத்து? அவனிடம், பட்டுப் பீதாம்பரம், பவுன், பலரக நகை, இவையில்லை, பூம்பாவை இருக்கிறாள், இருந்தால் என்ன தவறு? என்று கேட்பீர்கள்.

தவறல்ல—ஆபத்து! ஆகவேதான் ஏழை, "ஐயோ! கண்ணே! ஏன் நீ இவ்வளவு அழகுடன் இருக்கிறாய்?" என்று அழுகிறான்—அச்சம் காரணமாக — அக்ரமத்துக்கு அந்த அழகு பலியிடப்படுமோ என்ற பீதியின் காரணமாக.

இத்தகைய கலக்கம், ஏற்பட்ட காரணம், காட்டு ராஜா முறை. காட்டுராஜாக்களின் கண்களிலே, அழகான உருவம் தென்பட்டு விட்டால் போதும்.........புள்ளி மான் புலியின் பார்வையில் பட்டதுபோலத்தான்.

காட்டு ராஜாக்களின் காமப்பசி, சட்டம் கொடுத்த தண்டனையால், ஒழிந்தது—அடியோடு அல்ல.

அந்தப் பசியை விட அதிக வேகத்தில், பணப் பசி, உடைமைப் பசி, ஏற்பட்டிருக்கிறது, காட்டு ராஜா பரம்பரையின் கடைசி சந்ததியினருக்கு.

"கன்னியார், கடைக்கண் அழகியாக இருக்கிறாள்? மாலை 6-க்கு, மல்லிகைத் தோட்டத்து மாடி வீட்டுக்கு, அவளுடன் வந்து சேர்." என்று கட்டளையிடும் காட்டு ராஜாக்கள் இன்று இல்லை, ஆனால், "டே! காத்தான்! அந்தக் கிடேரி, அழகாக இருக்கே—அதோ அதுடா, செவலை நிறம். அதைப் பிடித்து வந்து நம்ம தொழுவத்திலே கட்டு" என்று கட்டளையிடும் ஜெமீன்தாரர் இருக்கிறார். யாருடைய பசுவாக இருந்தாலும், தனக்குத் தேவை என்றால் எடுத்துக்கொள்ளலாம், என்று அதிகாரம் செய்யும் ஆசாமிகள் அநேகர் உண்டு ஆராய்ச்சி நடந்து அரசியல் நிர்ணய சபை நடந்துகொண்டுள்ள நாட்களிலே இருக்கிறார்கள்; ஜெமீன் முறை அவலட்சணமானது. தூற்றல் அல்ல—தொகுப்பு.

இதோ, ஜெமீன் முறை பற்றிய விசாரணையை நடத்தி சர்க்கார் தயாரித்த சுவையுள்ள அறிக்கையில் ஒரு பகுதியைத் தருகிறோம், நிலையை விளக்க.

எருது, பசு, செடிகொடி, எதுவாக இருப்பினும், உடைமை உரிமை தனக்கு என்று கொண்டாடும், ஜெமீன்தாரர்களைப் பற்றிய தகவலில் ஒரு பகுதி இது. முன்பு காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான தோழர் முத்துரங்கத்தின் பண்ணையை அறிக்கையில் உள்ளபடி, படம் பிடித்துக்காட்டினோம். இந்தப் படப் பிடிப்பு, சிவகிரி ஜெமீன்!—மதுரை பாவட்டம்-சங்கரன் கோயில் தாலூக்கா—அந்த ஜெமீனில் உள்ள நிலைமையை, கந்தசாமித்தேவர் என்பவர், விளக்குகிறார், படியுங்கள்.

* * *

இடம்:—மதுரை.

காலம்:—1938, பிப்ரவரி 22.

இருப்போர்:—ஜெமீன் நிலையை விளக்கவந்த கந்தசாமித் தேவர்; ஜெமீன் முறை பற்றித் தகவல் சேகரிக்கச் சர்க்காரால் அனுப்பப்பட்ட குமாரசாமி ராஜா,

மிர்சாபூர் ஜெமீன்தார் முதலியோர்.

இந்தத் தோழரின் விளக்கத்தைக் கூர்ந்து கவனித்தால், ஜெமீன் முறையின் கேடுகள் நன்கு தெரியும்—ஏர் முனை ஏன் போர் முனையாக மாறுகிறது, என்பது நன்கு விளங்கும்.

எங்களுடைய எஸ்டேட்டில் பாதி நஞ்சை வாரம். பாதிப் புஞ்சை ரொக்கத் தீர்வை. வார நஞ்சைத் தீர்வையானது, ஒரு ஏக்கருக்கு ரூபாய் 3-3-9 முதல் ரூபா 6-8-0 வரையில் இருக்கிறது. எங்கள் ஊருக்கு பக்கத்தில் திருமலாபுரம் என்று அயன் கிராமம் இருக்கிறது. அதன் தீர்வை ரூபா 4 முதல் ரூபா 5 வரையில் இருக்கிறது. எங்கள் சமஸ்தானத்தில் இருக்கிற நிலம் ஒரு போகம்தான். பழைய செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் கட்டுகள் எங்கள் ஜெமீன் எஸ்டேட்டுக்கும், அயன் நிலங்களுக்கும் தொடர்பு இருக்கிறது. அது பிளானில் தெரியும். கவர்ன்மெண்டு நிலங்களின் பொழிக்கல்லும் எங்கள் ஜெமீன் எஸ்டேட் பொழிக்கல்லும் ஒன்றாய் இருக்கிறது. அதற்கும் பிளான் கொடுக்கிறேன். எங்கள் ஜெமீன் எஸ்டேட்டில் பாதிவார நஞ்சை, பாதி தீர்வை புஞ்சை.

குமாரசாமி ராஜா

கு :- தீர்வை விகிதம் எப்படி?

கந்தசாமித் தேவர் :- வார நஞ்சைக்கு ஒருஏக்கருக்கு 40, 43 ரூபா வரையில் இருக்கிறது.

தலைவர்

கு :- கவர்ன்மெண்டு நிலத்திற்கு என்ன தீர்வை?

க :- ரூபா 4 முதல் ரூபா 5 வரையில் இருக்கிறது.

கு :- ஏன் தீர்வை இவ்வளவு ஜாஸ்தி?

க :- வாரமாக இருந்ததை நீக்கி இதை கம்யூட்டேஷன்—ல் செய்து இந்தமாதிரித் தீர்வை போட்டிருக்கிறார்கள்.

கு :- இதேஎஸ்டேட்டில் முன்னால் ரொக்கம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்களோவாரமில்லாது?

க :- அதாவது தீர்வை நஞ்சைக்கு ரூ 3-3-9 முதல் 6-8-0 வரையில் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கு :- எவ்வளவு வருஷ காலமாக?

க :- சுமார் எழுபது வருஷ காலமாக.

கு :- இந்தத் தீர்வையைப் பற்றி ஆட்சேபமில்லையா?

க :- இல்லை. கலெக்டர் கோர்ட்டில் செட்டில்மெண்டு செய்தது.

கு :- கம்மியூட்டேஷன் செய்தது எப்பொழுது?

க :- 1913-ம் வருஷத்தில்.

கு :- கோர்ட்டில்செட்டில்மெண்டு செய்தது என்று சொன்னீர்களே, எந்தக் கோர்ட்?

க :- ரெவின்யு கோர்ட்.

P. S. குமாரசாமி ராஜா

கு :- இதற்கப்பால் ஏதாவது செய்தீர்களா?

க :- இதை ஆட்சேபித்து ஐகோர்ட் வரையில் போனோம். ஆனால் கலக்டர் அவர்கள செட்டில் மெண்டில் செய்தது ஊர்ஜிதமாகி விட்டது.

சாட்சி

40 ரூபா முதல் 43 வரையில் தீர்வை ஏற்படுத்தப் பட்டிருப்பது பற்றிய காரணம் என்னவென்றால் கம்மியூடேஷன் போட்டபோது அகவிலை ஜாஸ்தியாக இருந்தது. அப்பொழுது நெல் விலை 18, 19 ரூபா வரையில் இருந்தது. இப்பொழுது 5 ரூபா முதல் 6 ரூபா வரையில் இருக்கிறது. நாங்கள் கிணறு வெட்டிச் சாகுபடி செய்திருந்தாலும் கூட நஞ்சைக்குத் தண்ணீர் பாய்ச்சிச் சாகுபடி செய்ததாகத் தீர்வைபோட்டு விடுகிறார்கள். அறுவடையான பிறகு சுவாமி போகம், ஐயனார் போகம், குளம் வெட்டு முதலிய செலவுகளைக் கூட நீக்காமல், நாங்கள் சிரமப்பட்டுக் களைவெட்டியும், கட்டி, மண்ணு, கல்லு இவைகளை எடுத்துச் சாகுபடி செய்தால் அவைகளையும் நீக்காமல் இவர்களுக்கு லாபம் இருக்கிறதென்றும் கம்யூட்டேஷன் போடலாமென்று சொல்லித்தீர்வையை உயர்த்தி விட்டார்கள். அந்த மாதிரிச் செலவுகள் எல்லாம் கூட வருமானம்தான் என்று சொல்லித் தீர்வையை உயர்த்தி விட்டார்கள். இரண்டு ஏக்கர் நிலம் ஒருவருக்கு இருந்தால், ஒரே நாளில் அறுவடை செய்ய முடியாது. ஒரு நாள் அறுத்து ஒருஇடத்தில் கொண்டு வந்து அறுத்ததை அடித்து அம்பாரம் போட்டிருப்பான். மறுநாள் இன்னொரு ஏக்கர் நிலத்தை அறுத்து அதே இடத்தில் அடிப்பார்கள். பிணையல் போட்டு மாடு ஓட்டும்போதுதப்பித் தவறி மாடுகள் ஏற்கனவே போட்டிருக்கிற அம்பாரத்தை மிதித்துவிட்டாலோ அல்லதுமாடுகள்வாய்வைத்துதாளைப் பிடுங்கி இழுத்தாலோ ஜெமீனில் போடப்பட்டிருந்த குறி அழிந்திருக்கிறதென்று சொல்லி அதற்காகக் கால் கோட்டை அரைக் கோட்டை சேர்த்து கம்மியூட்டேஷன் சேர்த்து அதிக தீர்வை போட்டு விடுவார்கள்.

ஒரே குளத்தில் பாய்ச்சலில் ஜமீனுக்குப் பண்ணை நிலம் கொஞ்சம் இருக்கும். சம்சாரிகளுக்கும் நிலம் இருக்கும். இப்படி இருக்கும்போது ஜமீன் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக அரைவாசியை அடைத்து அந்தத் தண்ணீரைத் திருப்பித்தங்கள் நிலத்துக்கு பாய்ச்சிக் கொள்ளுவார்கள். அந்த மாதிரி தண்ணீரை அடைத்து திருப்பிக் கொண்டு போவதை நாங்கள் ஆக்ஷேபித்தால் எங்கள் பேரில் கிரிமினல் கேஸ் போட்டு விடுவார்கள். அதனால் குடிகள்நிலங்கள் சரியாக விளையாது. இதைப் பற்றி ஜமீன்தாரிடத்தில் தாவா செய்து கொண்டால் எங்கள் நிலம் தண்ணீர் பாய்ந்து விளைந்திருக்கிறபோது உங்கள் நிலம் விளையவில்லை என்பது சுத்த தப்பு. அது உங்களுடைய அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது. ஆகையால் தீர்வை தள்ளிக் கொடுக்க முடியாதென்றும் ஏற்பட்ட தீர்வையைக் கட்டித்தான் ஆகவேண்டுமென்றும் கட்டாயப் படுத்துகிறார்கள்.

மீர்ஸாபுரம் ஜமீன்தார்

கேள்வி :- இந்த விஷயங்கள் உங்களுக்கு நேரில் தெரியுமா?

பதில் :- நானும் ஒரு சம்சாரி, எனக்கு நன்றாய்த் தெரியும்.

சாட்சி :- எங்கள் ஊரில் காட்டு மிருகங்கள் ஜாஸ்தி. அவைகளால் அனேக தடவைகளில் பயிர்கள் நாசமாக்கப்பட்டிருக்கிறது. சேதம் ஜாஸ்தியாகவும் ஏற்பட்டிருக்கிறது. இப்படி அழிவு ஏற்பட்டாலும் சரி, காற்றும், பூச்சி, புழுக்களாலும், வெள்ளத்தாலும் சேதம் ஏற்பட்டாலும் கூட இது எல்லாம் உங்கள் சுவஸ்தியால் ஏற்பட்டதென்று சொல்லி தீர்வையை போட்டு விடுவார்களே தவிர ரிமிஷன் கொடுக்க மாட்டார்கள். எங்களுக்கு ஒரு நாளும் வஜா கிடையாது. மழையே இல்லாமல்

போனாலும் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் போனாலும் நாங்களே எங்கள் சொந்த செலவில் கிணறு வெட்டி தண்ணீர் பாய்ச்சி சாகுபடி செய்தாலும் சரி, எது எப்படி கெட்டுப் போனாலும் சரி எங்களுக்கு வஜா என்பது கிடையாது. பக்கத்திலிருக்கிற சர்க்கார் நிலங்களுக்கு வஜா கொடுத்தாலும் எங்களுக்கு வஜா என்கிற பேச்சே கிடையாது. எங்கள் நிலங்களுக்குச் சர்வே கிடையாது. ஆனால் ஜமீனிலேயேதோ சர்வே செய்ததாக ஒரு ரிகார்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் குடிகள் அனுபோகத்திலிருக்கிறதும், சாகுபடி ஆகிற நிலங்களிலும் கூடுதல் குறைச்சலிருக்கும். இதை நிவர்த்திக்க ஒரு வழியும் கிடையாது. ஜமீனில் போடுகிற தீர்வையைக் கட்டித்தான் ஆக வேண்டும்.

பி. எஸ். குமாரசாமி ராஜா.

கேள்வி :—கோர்ட் ஆப் வார்ட்ஸில் சர்வே செய்யப்படவில்லையா?

பதில்:—சர்வே ஆகி இருக்கிறது. ஆனால் செட்டில்மெண்டு ஆகவில்லை. எங்களுக்கு ஜமாபந்தி கிடையாது. எந்த மகசூல் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறது, எந்த மகசூல் எழுதப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியாது. நாங்கள் ராகி சாகுபடி செய்திருந்தால் ஜமீனில் நெல் சாகுபடி என்று எழுதி இருந்தால் அதன் படிதான் தீர்வைசெலுத்தவேண்டும்.

எந்த நிலத்திற்கு எந்தவிதமான தீர்வை போட்டிருக்கிறதென்பது கூட எங்களுக்குத் தெரியாது. ஆகையால் கவர்ன்மெண்டில் எங்களுக்கு ஜமாபந்தி நடத்திக் கொடுக்க வேண்டும்.

பிரஸிடெண்ட்.

கேள்வி :— உங்கள் ஜமீன்தார் எங்கே குடியிருக்கிறார்கள்?

பதில் :—முந்தின ஜமீன்தார் அனேகமாக ஊரில் இருந்ததே இல்லை. ஆனால் இப்பொழுது இருக்கிற ஜமீன்தார் அனேகமாக ஊரில் தான் இருக்கிறார்.

கேள்வி :—உங்கள் ஜமீனில் மானேஜர் அல்லது திவான் இருக்கிறாரா?

பதில் :—இருக்கிறார்.

கேள்வி :—அவர்கள் ஒன்றும் செய்கிறதில்லையா?

பதில் :—அவர்கள் வரி வசூல் செய்கிறதில்தான் அக்கரையாக இருக்கிறார். ஜமீன்தார் சொல்லுகிறதை அமுல் நடத்துகிறாரே தவிர குடிகள் ஏதாவது குறைகள் சொன்னால் அதைக் கவனிப்பதே கிடையாது.

கேள்வி :—ஜமீனில் ரிசீவர் இருந்தாரா?

பதில்:—இருந்தார். அவர் சரியாக நடக்கவில்லை என்று புகார் செய்ததால் அவரை நீக்கிவிட்டார்கள்.

கேள்வி:—நஞ்சை மேல் புஞ்சை தீர்வை எப்படி?

பதில்:—இரண்டு போகளும் ஒப்புக்கொண்டால் அதற்கு 4 ரூபாய் தீர்வை. அதாவது புஞ்சை தீர்வைக்கு மேல் 4 ரூபாய் தண்ணீர் தீர்வை போடுகிறார்கள்.

கேள்வி:—உங்களுக்கு இதில் என்ன ஆக்ஷேபம்?

பதில்:—பக்கத்திலிருக்கிற அயன் நிலங்களுக்கு 4 ரூபாய் முதல் 8 ரூபாய்வரையில் இருக்கிறது. ஆனால் அதே நிலங்களுக்கு 40 ரூபாய் ஏற்பட்டிருக்கிறதென்பதுதான் எங்களுக்கு இருக்கிற குறை.

இன்னும் தீர்வை வசூல் செய்கிறதில் எங்களுக்கு எவ்வளவோ கஷ்டம் இருக்கிறது. பட்டா போடுகிறார்களே அதற்குகூட ஜமீன்தாருக்கு ஏதாவது ரூபாய் கொடுக்க வேண்டும்.

பி. எஸ். குமாரசாமி ராஜா.

கேள்வி:—உங்கள் ஜமீன்தாருக்கு நேரில் பணம் கொடுக்கிறதுண்டா?

பதில்:—ஆம், நானே நேரில் கொடுத்திருக்கிறேன்.

கேள்வி:—தீர்வையை வசூல் செய்கிறது யார்?

பதில்:—தீர்வையை எங்களிடத்திலிருந்து வசூல் செய்கிறதற்கு மணியம் மட்டும் வரமாட்டார்கள். அவருடன் 40, 50 போக்கிரிகளையும் கூட்டிக்கொண்டு வருவார்.

தீர்வையை இப்பொழுது செலுத்துவது கஷ்டமாக இருக்கிறது. இன்னும் கொஞ்சநாள் கழித்து செலுத்துகிறோம் என்று சொன்னால் கேட்க மாட்டார்கள். கூட வந்திருக்கிற ஆள்களைக் கொண்டு ஆடு மாடுகள், இதர ஜங்கம சொத்துக்களை பலாத்காரமாக எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். அவர்களை எதிர்த்து நிற்க எங்களுக்கு பலம் கிடையாது.

மீர்ஸாபுரம் ஜமீன்தார்.

கேள்வி:—புஞ்சைக்கு தீர்வை என்ன?

பதில்:—10 அணா. நஞ்சைமேல் புஞ்சைக்கு ரூ. 0—12—4. இந்த நிலத்தில் பக்கத்தில் நஞ்சையாக இருப்பதால் தண்ணீர் கசிவு இருந்து கொண்டேயிருக்கும், அதில்புஞ்சை தான்யம் விளையாது இருந்தாலும் தீர்வை கொடுக்கவேண்டும். அதை நஞ்சையாகச் செய்யவேண்டுமானால் அதற்கு 4 ரூபாய் தீர்வை கொடுக்க வேண்டும்.

கேள்வி :— கவர்ன்மெண்டு புஞ்சைக்கு தீர்வை எப்படி?

பதில் :— 0—13—0 முதல் ரூ. 1—2—0 வரையிலிருக்கிறது.

பி. எஸ். குமாரசாமி ராஜா.

கேள்வி:—தோட்டத்திற்குஎன்ன தீர்வை?

பதில்:—புஞ்சை ரேட்தான். ஆனால் சில தோட்டங்களுக்கு அதிக தீர்வை வாங்கி இருக்கிறார்கள். புஞ்சை நிலத்தில் கிணறு வெட்டி பாயும்படி செய்து கரும்பு, வெற்றிலை முதலியவைகள் சாகுபடி செய்தால் 14 ரூபாய் முதல் 18 ரூபாய்வரையில் தீர்வை போடுகிறார்கள்.

கேள்வி :- கிணறு வெட்டுகிறதற்கு முன்னால் 10 அணா தீர்வை இருக்கிறபோது கிணறு வெட்டி சாகுபடி செய்தால் அதற்கு ஜாஸ்தி தீர்வை போடுகிறார்கள் என்று சொன்னீர்களே அதற்கு ரசீது இருக்கிறதா?

பதில் :- ரசீது கொடுக்கமாட்டார்கள்.

கேள்வி :- ஜமீன்தார் குளம், கால்வாய் மராமத்து செய்கிறதுண்டா?

பதில் :- இது வரையில் குளம், கால்வாய் முதலியவைகளைமராமத்து செய்ததே கிடையாது. பெடிஷன் போட்டாலும்கூட ஒருவரும் கேட்க மாட்டார்கள். இது சம்பந்தமாக கோர்ட்டில் ஒரு கேஸ் நடத்தினோம். கலெக்டருக்கு பெட்டிஷன் போட்டோம். டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பினார்கள். அவர் குடிகளுக்கு அனுகூலமாக ரிப்போர்ட் செய்தார். கலெக்டரும் குடிகளுக்கு அனுகூலமாக குளங்களையும், கால்வாய்களும் ரிப்பேர் செய்து கொடுக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார். ஆனால், ஜமீன்தார் அவர்கள் ஐகோர்ட் வரையில் போனார்கள். ஐகோர்ட்டில் அவர்களுடைய பெட்டிஷனைத் தள்ளிவிட்டார்கள். 1925ம்

(9ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 8—6—47 [ஞாயிறு

தென்றல்—அங்கு!

வீரத்தமிழர் வி. ஓ. சிதம்பரம் செய்த தியாகம்—சக்கரவர்த்தி நாயினுர் ஏற்ற சிரிந்தவாழ்வு—பாஞ்சாலசிங்கம் லஜபதி பட்ட அல்லல்—பகவத்சிங் தூக்கில் தொங்கிய துன்பம்—அலிசகோதரர்கள் ஆற்றிய பெரும் பணி—போஸ் புரிந்தபோர்—முதலியன வீண்போக வில்லை. அவர்கள் உழைப்பு உருவாகிவிட்டது. கனவு நினைவாகி விட்டது.

விடுதலை! ஆம்! அரசியல் விடுதலை, இந்தப்பரந்த உபகண்டமான இந்தியாவிற்குக்கிடைத்துவிட்டது. உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாளாகும், ஜூன் இரண்டாந்தேதி. இதன்உயர்வைக் குறைத்து மதிப்பிடவோ, மறைத்துப் பேசவோ நாம் தயாராக இல்லை, உலக வரலாற்றின்உண்மை சில அறிந்துள்ள காரணத்தால்.

'ஏழுகடலிலும் என்து ஆதிக்கம் எனது சாம்ராஜ்யத்தில் ஞாயிறு என்றும் மறையாது எனப் பெருமையாகப் பேசிக் கொள்ளப்பட்டஏகாதிபத்தியத்தினிடமிருந்து—பல இனம்—பலகலை—பற்பல மொழி—வெவ்வேறு பழக்கவழக்கம்—முரண்பட்ட கோட்பாடு — மலிந்த இந்தியா அரசியலில் விடுதலை பெறுவதென்றால் விளையாட்டல்ல. ஏகாதிபத்தியத்தைத் தற்கொலைக்குள்ளாக்க அல்ல சாம்ராஜ்யாதிபதியாகஅனது நான், என்வீராப்புப்பேசிய சர்ச்சில் துரையின்கண்முன்னரேஏகாதிபத்தியத்தின் திலகமாகஇலங்கிய இயற்கை எழில்மிக்க இந்திய பூபாகம், இரு நூறு ஆண்டு இணைப்புகருப் பின்னர் இடர்நீங்கி அரசியல்விடுதலை அடைவதென்றால் எவர்தான் பெருமை கொள்ளார்? அதுவும் ஏகாதிபத்தியமே விடுதலையை விரும்பித்தருவதென்றால்? அந்த விடுதலைச் சாசனத்தை உலகமே வரவேற்கும் என்று குறிப்பிடுவது மிகையாகாது.

ஆபிரக்கணச்சில் மக்களைப் பலிகொடுத்த பின்னரல்லவா அமெரிக்க விடுதலை சாத்தியமாயிற்று? நம் கண்முன்னர் நடைபெற்ற இந்தோனேஷ்ய சுதந்திரக்கிளர்ச்சிக்குத் தம் இன்னுயிர் ஈந்தவர் எவ்வளவு பேர்? இன்னும் அங்கு சிக்கல் தீர்ந்த பாடில்லையே? வைட்நாம் போர்க்களத்தில் பிணவாடையல்லவா இன்னும் வீசிய வண்ணம் இருக்கிறது? இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது இந்தியாவிற்குக் கிடைத்த விடுதலையை எவ்வாறு குறைத்து மதிப்பிடுவது?

வைசிராயின் விடுதலைச் சாசனத்தில் 'ஏகஇந்தியா' எனும் கொள்கை கைவிடப் பட்டிருக்கிறது. 'இருஇந்தியா' ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஜனப்ஜின்னு கேட்பது அதில் இல்லை, நிலப்பரப்பில். இருந்தாலும் சகல உரிமையும் உடைய பாகிஸ்தான்—இன அரசு இடம்பெற்று விட்டது. பாஞ்சாலத்தை இரண்டாக்குவது; கிழக்கு வங்கத்தையும் மேற்கு வங்காளத்தையும் வேறுக்குவது; அஸ்ஸாம் மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகமாவுள்ள சில்ஹெட் பகுதியைப்பாகிஸ்தான் கிழக்கு வங்கத்தோடு இணைப்பது; எல்லைப்புற மாகாணத்தில் சர்வஜனவாக்கெடுத்து முடிவிற்கு வருவது; பலுசிஸ்தானத்திலும் எல்லைப் புறத்தில் கையாளும் முறையையே மேற்கொண்டு ஒரு முடிவுக்கு வருவது; சிந்து மாகாணத்தையும்ஒன்றுசேர்ந்து பாகிஸ்தான் பகுதிக்கு ஒரு அரசியல் நிர்ணய சபையை அமைப்பது; பின்னர் ஹிந்துஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடைக்காலத்தில் இருதனித்தனி டொமினியன் சர்க்கார்களை அமைப்பது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. எல்லைக்கோடுஅமைக்க ஒரு கமிட்டியும் நியமிக்கப்படப் போகிறது. பணம், படை, வெளிநாட்டு உறவு முதலியனவும்வெவ்வேறுதான். 1948 ஜூன் வரட்டுமென்று காத்திருக்க மாட்டார்களாம் ஆங்கிலேயர். அதற்கு முன்னரே வெளியேறி விடுவார்களாம். இதற்கான சட்டம் சில நாட்களில் பார்லிமெண்டில் நிறைவேற்றப்படுமாம்.

ஜூன் மூன்றாந்தேதிஇரவு இதனை விளக்கிவைசிராய், நேரு, ஜின்னு, பல்தேவ்சிங் முதலியவர்கள் வானொலியில்பேசியுள்ளனர்.

"திட்டத்தை ஆதரிப்பதுதான் சரி என்றாலும், நான் இதை உங்களிடம் கூறுவதில்மகிழ்ச்சி எதுவும்கிடையாது. ஏக,ஐக்கிய இந்தியாவின் விடுதலைக்காகத் தலைமுறை தலைமுறையாக நாம் கனவு கண்டு வந்தோம். வீரப் போராட்டங்கள் நடந்தினோம். சிலபகுதிகள் விரும்பினால் பிரிந்து போகலாம் என்த் திட்டம் அறிவிப்பதைப் பார்க்க மனதுக்கு வேதனையாக இருக்கிறது."

மேல் குறித்துள்ளது தோழர் நேருவின்சோகரசச்சொற்கள். அவர் உண்மை நோக்கத்தில்நமக்கு எள்ளளவும் ஐயமில்லை. நாட்டுவரலாறு அவர் கூற்றுக்குஆதரவுகொடுக்காது. இலகுவாக ஆள—நிர்வாகத்தை எளிதாக்க — உருவாக்கினர் ஏக இந்தியாவை. ஏகாதிபத்யம் கட்டைக்கால் இல்லாமல் கட்டின கட்டிடம் ஒன்று பட்ட இந்தியா. சென்றநூறு ஆண்டுகளாகத்தான் ஐக்கிய இந்தியாஎனப் பெயரளவில் இடம் பெற்றது. இதனை வைசிராய் அவர்களே தமது பிரசங்கத்தொடக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளார். என்றுமே இந்தியா ஒரே ஆட்சிமுறையின்கீழ் இருந்ததில்லை. ஏக இந்தியாவாக இருந்திருக்குமானால், ஐந்நூறுக்குமேற்பட்ட சமஸ்தானங்கள் இந்திய உபகண்டத்தில் இன்று இருக்கக்காரணம் என்ன? இவைகளை நேரு அறியார் என்று சொல்ல முடியுமா?

ஏக இந்தியா என்கிற ஆசையை அவர்வளர்த்துக்கொண்டார் ஆரம்ப முதல். அந்த மயக்கத்திலிருந்து அவரால் விடுபடமுடியவில்லை. அதனுல்தான் சோகிக்கிருர்.

விருப்பமில்லாதவர்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதற்கு நேர்மையான முறையொன்றும் கிடையாது. பலாத்காரத்தினுல்தான் அவர்களை அடக்கி ஆளமுடியும். அத்தகைய ஆட்சி நல்லாட்சி ஆகாது; அடக்குமுறைஆட்சிதான். விரும்பக்கூடியதுமல்ல நீடித்து நிலைக்கவும் நிலைக்காது. ஆசிய நாடுகளுடன் நல்லுறவுகொண்டு வாழ முடியும் எனும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ள நேரு, ஒரே பூபாகத்திலுள்ள மக்கள், பிரிந்து தனியாட்சி அமைத்துக்கொள்வதற்குச்சோகிக்க வேண்டிய அவசியமே கிடையாது.

"இந்த தேசத்தில் நமது முன்னோர்கள் பல்லாயிரக் கணக்கான வருஷங்களாகப் பரஸ்பர உறவுடனும் சகிப்புத்தன்மையுடனும்வாழ்ந்திருக்கிருர்கள்" எனப் பல்தேவசிங் கூறுகிறார்.

இதற்கென்ன ஆதாரமோ நாம் அறியோம். சீக்கிய மதம் தோன்றினதற்கான காரணமோ, இவர் கூற்றைப் பொய்யாக்கிவிடும். முன்னோர்கள் காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும் பரஸ்பர உறவும் சகிப்புத்தன்மையும் இன்று ஏன் மறைந்துபோய் விட்டது? பாகிஸ்தான் பகுதியில் சேர்ந்திருக்க முடியாதென்று பாஞ்சாலத்தைப் பிளக்கவேண்டும் எனப் பேசினவர்கள் பலதேவ்சிங்கின் பரம்பரையினர்தானே? இதனை எவ்வாறு மறைப்பது? 'சீக்கியஸ்தான்' என இவர்கள் பேசினதில்லையா?

ஜனாப் ஜின்னாவை இழித்தும் பழித்தும் பேசுவதின்மூலம் இஸ்லாமியத்தோழர்களுக்கு எரிச்சலை உண்டாக்கும் சிறுசெயலை, நமது தேசியப்பத்திரிகைகள் இன்னும் கைவிடக்காணோம். ஒரு குடும்பத்தில் பாகப் பிரிவினைக் கிளர்ச்சி ஏற்படுகிறது. ஆரம்பத்தில் அதனை எதிர்க்கிறார்கள் சிலர். பின்னர் பாகப் பிரிவினை ஏற்பட்டு விடுகிறது. முன்னர் பிரிவினையை எதிர்த்தவர்கள், இதனைக் கண்டு சும்மா இருப்பார்களா? கோபிப்பார்கள், தூற்றுவார்கள். 'இவன் என்ன? பிரித்துககொண்டு போன சொத்தை எத்தனை நாள் வைத்துக்கொண்டுவாழப்போகிறான்? அந்த இலட்சணத்தைப் பார்த்துவிடுவோமே' எனவும் வாழ்த்துவார்கள். இந்த இரகத்தைச் சேர்ந்தவைகள் தான் நமது தேசியத் தாள்கள். பாகிஸ்தான் கிளர்ச்சியை இவைகள் நையாண்டி செய்வதிலேயே கவனத்தைச்செலுத்தி வந்திருக்கின்றன. பாகிஸ்தான் கிடைத்துவிடுமானால் இந்தக்கூட்டத்திற்குக் கொதிப்புஏற்படாதிருக்கமுடியுமா? இதன் விளைவாகத்தான் பாக்கிஸ்தானைப்பரிகசிக்கிறார்கள் — பழிக்கிறார்கள். இவைகளைப்பற்றி நாம் கவலைப்படத்தேவை இல்லை.

ஜனாப் ஜின்னா தீட்டிய பாகிஸ்தான் அல்ல இன்று கிடைத்திருப்பது. புதியதிட்டத்தின்மீது முடிவு கூறும் அதிகாரம் லீக்காரியக்கமிட்டிக்கே உண்டென்று ஜின்னா கூறி இருந்தபோதிலும், அதனை அவர் ஏற்றுக்கொண்டார் என்றுதான் சொல்ல வேண்டும். எல்லைப்புற முஸ்லிம் தோழர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்திருப்பது ஒன்றே, புதிய திட்டத்தை அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதற்குப் போதிய அத்தாட்சியாகும்.

ஏழே ஆண்டில் இந்த இணையற்ற வெற்றியை ஜனாப் ஜின்னா பெற்று விட்டார். அவரின் அறிவும் ஆற்றலும் இஸ்லாமிய இனத்திற்கு ஒரு முஸ்லிம் தாயகம் வாங்கிக்கொடுத்து விட்டது. இனி ஒன்றல்ல இந்தியா. பாகிஸ்தான்—ஹிந்துஸ்தான்; இரு சுதந்திர சர்க்கார்.

ஹிந்துஸ்தான் அரசியல் சுயநிர்ணயசபை பாதிக்குமேல், தனது வேலையை முடித்து விட்டது. B–C–தொகுதியின் நிலப்பரப்பு குறைந்து போயிருக்கிறது. சிறுசிறு மாகாணங்கள் தான் அவைகள். A. தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளது சென்னை மாகாணம்—நமது திராவிடம்.

யூனியன் அரசியல் அமைப்பு முடிந்து விட்டதென்றே கூறலாம். இனி மாகாணங்களின் ஆட்சிமுறை அமைப்புத்தான் அமைக்கப்பட வேண்டும். ஒரு மாகாணத்திலிருந்து மற்றோர் மாகாணத்திற்குக்கொண்டு வரும் முதலைத் தடுக்கவோ, உற்பத்திப் பொருட்கள்மீது வரிபோட்டுத்தடுக்கவோ உள்ள அதிகாரம் அனைத்தும் யூனியன் சர்க்காருக்குத்தான் இருக்கிறது. மாகாணங்களுக்கு இந்த வித உரிமை எதுவும்கிடையாது. எனவே தொழில்வளம் உள்ள பம்பாய், தொழில் வளமற்றதும் இயற்கை வளம் மிக்கதுமான திராவிடத்தைச், சென்னை மாகாணத்தைச் சுரண்டும் பணியில் மும்முரமாக ஈடுபடும். இது மட்டும் அல்ல. இங்கு புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதும் முடியாமற்போகும். ஒருவேளை ஏற்படுத்தின போதிலும், தொழில் முன்னேறியுள்ள பம்பாய் மாகாணத்தோடு போட்டி இடமுடியாது. ஆதலால் ஏற்கனவே இருக்கும் தொழில்களுக்கு ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படக்கூடும்.

இதனால் நமது திராவிடர்களுக்கு வறுமைதான் வாழ்வாகக் கிடைக்கும். வளம் வறண்டுபோகும்; வாழ்வு கருகிவிடும்; பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடும்; இது ஆபத்தான நிலை. புதிய அரசியல் சட்டம் இங்கு அமுலுக்குவந்து, அன்று முதல் பத்தாண்டுகள் வரையில் யூனியன் ஆதிக்கத்திலிருந்து சென்னை மாகாணம் விலகவேமுடியாது. அதன் பிறகுதான் விரும்பினால் விலகும் உரிமை கிடைக்கும். இந்தப் பத்தாண்டும் திராவிடத்தின் செல்வம் சீர்கேடடையும், மக்களும் தேயிலைத் தோட்டத்திற்கோ, கரும்புத்தோட்டத்திற்கோ கூலியாகக் கப்பலேற வேண்டியதுதான்.

'பகற்கனவு' எனப்பழிக்கப்பட்ட பாகிஸ்தான் ஏற்பட்டாய்விட்டது. அங்கு பாகிஸ்தான் ஏற்படுவதற்குத் தென்னாட்டு முஸ்லீம்கள், இதுவரை எடுத்துக்கொண்ட முயற்சி போற்றுதற்குரியதே. அதற்காக இனி அவர்கள் செய்ய வேண்டியவேலை ஒன்றும் இல்லை என்றே சொல்லலாம். திராவிட நாடு தனிநாடு ஆவதுதான் இனி அவர்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அவர்கள் உயர்வதும் தாழ்வதும் திராவிடப் பிரிவினையில்தான் ஒன்றி இருக்கிறது. இதனை இஸ்லாமியத் தோழர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

தென்றல் — அங்கு. உடலும் உள்ளமும் குளிர்வதற்கு வழி பிறந்தாகிவிட்டது. ஆனால் இங்கோ வேதனை வளரும் சூழ்நிலை இருக்கிறது. இதிலிருந்து நாம் தப்ப முயற்சிக்கவேண்டும்.

"ஜெய்ஹிந்த்" என்று அடிமூச்சில் கூறினார் தோழர் நேரு. 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' எனப்பெருமிதத்தோடு உச்சரித்தார் தோழர் ஜின்னா. திராவிடநாடு திராவிடர்க்கே! என நாம் முரசு அறையும் நிலையிலிருக்கிறோம். திராவிடர்கள் சிறு சிறு மனவேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு, ஒருமனத்துடன் சலியாது உழைக்க வேண்டும், திராவிடம் பெற. வாழ்க திராவிடம்.

✽

7-ம் பக்கத்தொடர்ச்சி

வருஷத்தில் ஒரு பெரிய உடைப்பு வந்தது. 1932ம் வருஷத்தில் ஐகோர்ட்டில் எங்களுக்கு அனுகூலமாக உத்தரவு கிடைத்தது. ஆனால் ஜமீன்தார் இது வரையில் ஒருவிதமான ரிப்பேரும் செய்யவில்லை.

மீர்ஸாபுரம் ஜமீன்தார்

கேள்வி:- அதன்பேரில் கலெக்டருக்கு ஏதாவது மனு போட்டீர்களா?

பதில்:- இல்லை. இதுவரையில் எங்களுக்கு இந்த விஷயத்தில் எவ்வளவோ பணம் செலவு ஆயிற்று. இன்னும் ஒரு விதமான அனுகூலமும் ஏற்படவில்லை. அதற்குமேற்கொண்டு பணம் செலவழிக்க எங்களிடத்தில் பணம் இல்லை. கம்யுட்டேஷன் செய்து விட்டால் அவர்களுக்கு தீர்வை எப்படியாவது வந்து விடும் என்ற

நம்பிக்கையால் அவர்கள் குளம் முதலியவைகளை மராமத்து செய்கிறதில்லை என்று அவர்கள் ஒரு தீர்மானம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் புஞ்சைகளை எல்லாம் சாஸ்வதமான நஞ்சையாக வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அது எங்களுக்கு ரொம்ப பிரதிகூலமாக இருக்கிறது.

கேள்வி :- இன்னும் என்ன காடு முதலியவை இருக்கிறதா?

பதில் :- எங்கள்ஜமீனில் 32சதுர மைல்—8மைல் நீளம், 4 மைல் அகலம் காடு இருக்கிறது. ஒரு மைல் நீளம் 4 மைல் அகலமுள்ள காட்டை மாடுகள் மேய்ச்சலுக்காகவும், விவசாயத்திற்கு வேண்டிய எரு, கொடி, தழை முதலியவைகள் எடுத்துக் கொள்வதற்காக குடிகள் வசம் ஏதோ சொல்ப தீர்வையின் பேரிலிருந்தது. முன் இருந்த ஜமீன்தார் இவையும் எல்லா காட்டோடு சேர்த்து குடிகளுடைய ஆடு மாடுகள் மேய்ச்சலுக்காக கொடுக்கிறோம், இன்னும் தழை முதலியவைகள் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறோம் என்று சொன்னதின் பேரில் விட்டுக் கொடுத்தோம். ஆனால் எங்களுக்கு அதில் சில உரிமைகள் கிடைத்ததாலும் விட்டுக் கொடுத்தோம். ஆனால் அந்த உரிமைகள் எல்லாம் அபகரிக்கப்பட்டது. அப்பேர்ப்பட்ட பாத்யங்களை பணக்காரர்களும் தௌஷ்டியமாக இருக்கிற ஜனங்களும் தான் அந்த பாத்யங்களை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். சாதாரணஜனங்களுக்கு ஒரு விதமான அனுகூலமும் இல்லை. இந்த நிலங்களை விற்கக்கூட ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

மீர்ஸாபுரம் ஜமீன்தார்

கேள்வி :- யாருக்காவது இந்தக் காடுகளை விற்று இருக்கிறார்களா?

பதில் :- ராஜபாளையத்திலிருக்கிற ஒருராஜாவுக்கு 250 ஏக்கரா விற்றிருக்கிறார்கள். அவர் அந்தமலையிலிருக்கிற மரங்களை வெட்டி ஏதோ தோட்டம் போட ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறார். இந்த மரங்களை வெட்டுகிறதால் அடர்ந்திருக்கிற இடம் பொட்டலாகப்போகிறது. அதனால்கொஞ்ச நஞ்சம் பெய்கிற மழைகூட தங்குகிறதில்லை. வழிந்து ஓடி விடுகிறது. அதனால் எங்கள் நிலங்களின் விளைச்சலுக்கு கூட கெடுதல் ஏற்படுகிறது. இது மட்டுமல்ல. களம்,புறம்போக்கு, பொதுஜனங்கள் நடைபாதை முதலியவைகளைக் கூட ஜமீன்தார் யார் யார்ரூபாய் கொடுக்கிறார்களோ அவர்களுக்குவிற்கப்போகிறதாக இப்பொழுது இரண்டு வருஷ காலமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

தலைவர்

கேள்வி :- இது வரையில் ஏதாவது அப்படி விற்றிருக்கிறார்களா?

பதில் :- சென்ற வருஷமும் கொஞ்ச நிலங்களை இப்படி விற்றிருக்கிறார்கள்.

கேள்வி :- சுமார் எவ்வளவு இந்த மாதிரி விற்றிருக்கிறார்கள்?

பதில் :- சுமார் 200 ஏக்கர் வரையில் சில கிராமங்களில் விற்றிருக்கிறார்கள்.

கேள்வி :- நீங்கள் தாவா செய்யவில்லையா?

பதில் :- ஜமீன் மானேஜர்முதலியவர்களிடத்தில் போய்சொல்லி இருக்கிறோம். அவர்கள் ஜமீன்தார் உத்தரவுக்கு மாறாக நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்லிவிட்டார்கள்.

கேள்வி :- கோர்ட் ஆப் வார்ட்ஸ் சர்வேயில் இவைகள் காட்டப்பட்டிருக்கிறதா?

பதில் :- ஆம்.

கேள்வி :நீங்கள் தாக்கல் செய்திருக்கிற ரிஜிஸ்டரில் களம், புறம்போக்கு முதலியவைகளை விற்றிருக்கிறதாக சொல்லும் நிலங்களின் நம்பரைக் காட்ட முடியுமா?

பதில் :- ஆம். (shows an item in the Register)

பி. வேங்கடாசலம் பிள்ளை

கேள்வி :- இந்த மாதிரி செய்திருப்பதற்குகிரய பத்திரம் ஏதாவது தாக்கல் செய்ய முடியுமா?

பதில் :- எங்கள் ஜமீனில் கிரய பத்திரம் செய்து கொடுக்க மாட்டார்கள். புதிதாக பட்டாதான் போட்டுக் கொடுப்பார்கள்.

கேள்வி :- அந்த பட்டாவை தாக்கல் செய்ய முடியுமா?

பதில் :- அந்த பட்டாக்கள் எங்கள் வசமில்லை. அவர்கள் ஜமீன்தாருக்கோ அல்லது அவர்கள் மானேஜர் முதலியவருக்கு வேண்டியவர்களாக இருப்பதால் அவர்களிடத்தில் அந்த மாதிரியான பட்டாக்கள் இருக்கும்.

ஒருவர் நிலம் கிரயமாகி கைமாறினாலும் பட்டா மாற்றுகிறதில்லை. பெட்டிஷன் கொடுத்தாலும் மாற்றுகிறதில்லை. ஜாயிண்டு பட்டாதார்களில் ஒருவர் தீர்வை செலுத்தாமலிருந்தாலும் நிலம் ஏலம் போய்விடுகிறது. நிலச்சுவான்தாருக்குத் தெரிகிறதே இல்லை. உடனே பட்டா மாற்ற வேண்டும். அதிகமாகத் தீர்வை ஏற்பட்டதினால் நிலத்தை கிரயத்துக்கு வாங்குகிறவர்கள் கிடையாது. கடன் கேட்டாலும் கிடைக்கவில்லை. தீர்வை வசூலில் 200 ரூபாய் பாக்கி இருந்தால் 500 ரூபாய் பெறுமான நிலத்தை எழுதி வைத்து ஏலத்தில் விட்டு விடுகிறார்கள். இதுஎங்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. பெறுமான கிரயத்துக்குத் தகுந்தபடி எழுதி வைக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். என்னோடு இருக்கிற ஜாயிண்டு பட்டாதார் தீர்வைசெலுத்தாமல் இருந்தால் என் நிலத்தை ஏலம் போட்டு விடுறார்கள். ஜமீன்தாரிடத்தில் சொன்னாலும் கேட்கிறதில்லை.

பி. வேங்கடாசலம் பிள்ளை

கேள்வி :- ஜமீன்தார் ஏலத்தில் விட்டால் யார் எடுக்கிறார்கள்?

பதில் :- 500 ரூபாய் பொறுமான நிலத்தை எழுதிவைத்து 250 ரூபாய் பாக்கி இருந்தால் அதற்கு மாத்திரம் அவர்களே எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

P. S. குமாரசாமி ராஜா

கேள்வி:— மற்ற ஜமீன்தார்கள் ஒரு அணா பாக்கிக்காக 100 ரூபாய் சொத்தை ஏலத்தில்எடுத்துக்கொண்டிருக்கிறார்களே, இது நல்லது தானே?

பதில்:— எங்களுக்கு இது நஷ்டம் தானே. ஒரு நிலத்துக்குத் தீர்வை செலுத்தினால், எந்த நிலத்துக்கு அதுசெலுத்தப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறதில்லை. (அவர் ஒரு பட்டாவைச் சமர்ப்பிக்கிறார்.)

கேள்வி:—பட்டா நம்பர் இருக்கிறதே அந்த நிலத்துக்குத்தானே என்று அர்த்தம்?

பதில்:—அந்தப் பட்டா நம்பரில் எந்த நிலத்துக்கென்று சொல்வதில்லை. எங்கள் ஊரில் சத்திரம் தேவஸ்தானத்துக்கு என்று வரி கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதாவது தலைமை ஆபீசுக்கு கிராமங்களிலிருந்து வருகிற சமுசாரிகளுக்குச் சத்திரத்தில் சாப்பாடு போடவும் எளியவர்களுக்குச் சாப்பாடு போடவும் கொடுத்துக்கொண்டிருந்தோம். இப்போது அதெல்லாம் நடக்கிறதில்லை எங்களுக்கு வசூல் முறை கவர்ன்மெண்டில் நடக்கிற மாதிரி வேண்டும். ஜமாபந்தி கவர்ன்

மெண்டில் நடக்கிற மாதிரி நடக்க வேண்டும். மராமத்தெல்லாம் எஸ்டேட்டில் நடக்கிறதேயில்லை. கவர்ன்மெண்டே நடத்திக் கொடுக்கவேண்டும். காட்டுச் சமுதாயங்களை எல்லாம் கவர்ன்மெண்டாரே எடுத்துக்கொண்டு ஜனங்களுக்கு உபயோகப்படும்படி செய்யவேண்டும். ஜமீன்தாரிட்த்தில் இருக்கிறதினுல் கவர்ன்மெண்டாரே சீர்திருத்திக் கொடுத்தாலும்கூட அவர்கள் நல்ல நடப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை. ஜமீன்தார் முறையே இல்லாமல் இருக்க வேண்டும், கவர்ன்மெண்டுக்குப் பொறுப்பான ஒரு ரெவின்யூ உத்தியோகஸ்தரைப் போட்டு அவர்களே எல்லாவற்றையும் நடத்தவேண்டும். வரும்படியை வேண்டுமென்றால் ஜமீன்தார் எடுத்துக்கொண்டு போகட்டும்.

A. ரேங்கசாமி ஐயங்கார்

கேள்வி:—பொதுஜனங்களைஜமீன்தார்கள் மனம்போல் நடக்கும்படி விடாமல் அடக்கு முறைகளைக் கையாண்டு மனிதர்களின் சுதந்திர உரிமைகளைத் தடுப்பதால் கவர்ன்மெண்டார் ஜமீன்தார்களுக்குக் கொடுத்த சன்னது ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு ஒப்பந்தத்தில் கண்ட பாத்தியங்களை எல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறீர்களே; அவர்கள் என்ன செய்தார்கள், எப்படி உரிமையைப் பறித்தார்கள்?

பதில்:—ஒரு மனிதன் மெம்பராக இருக்கமுடியாது! ஜமீன்தார்கள் சொல்லுகிற மனிதருக்குத்தான் நிலச்சுவான்தார்கள் வோட்டுப் போடவேண்டும். வோட்டுப் போடாவிட்டால் ஹிம்சிக்கிறார்கள். ஓட்டுரிமைகளை ஜமீன்தார்கள் தடைப்படுத்துகிறார்கள்.

கேள்வி:—முனிசிபாலிடி எலக்ஷனிலா, டிஸ்ரிக்ட்போர்ட் எலக்ஷனிலா?

பதில்:—எந்த வோட்டு ஆனாலும் சரி எந்த ஆளுக்குப் போடவேண்டுமென்று சொன்னார்களோ அவர்களுக்குத்தான் போடவேண்டும்.

கேள்வி:—தாசில்தார் மூலமாக யதாஸ்துகள் அனுப்பியிருக்கிறார்களா? ஜமீன் தலைமை ஆபீசிலிருந்து இன்னாருக்குத்தான் வோட்டுப் போடவேண்டுமென்று யதாஸ்து அனுப்பியிருக்கிறார்களா? அவர்களுடைய சிப்பந்திகள் மூலமாக ஏதாவது அந்தமாதிரி உத்தரவு அனுப்பியிருக்கிறார்களா?

பதில்:—எழுத்து மூலமாகக் கொடுக்கமாட்டார்கள். வேலைக்காரர்களை விட்டுச் சொல்லி அனுப்புவார்கள். சில சமயங்களில் துண்டு நோட்டீஸ் அச்சடித்து அனுப்புவார்கள். ஜனங்களை இழுத்துக்கொண்டு போய் ஓட்டுப் போடும்படி சொல்லுவார்கள்.

கேள்வி:—என்ன கட்டாயமா? அவருடைய உத்தரவை மீற முடியாதா?

பதில்:—மீறி வோட்டு செய்தால் அவனுடைய மாடுகளைப் பண்ணை நிலங்களில் மேய்ந்ததாகச் சொல்லி பவுண்டில் அடைத்துவிடுவார்கள். புஞ்சைக்குத் தண்ணீர் பாய்ச்சினான் என்று சொல்லித் தண்டத் தீர்வை போட்டுவிடுவார்கள். காட்டில் விறகு வெட்டினான் என்று சொல்லிக் கேஸ் போடுவார்கள்.

கேள்வி:—வேறு என்ன சுதந்தர உரிமையைத் தடுக்கிறார்கள்?

பதில்:—எங்களிடத்தில் நல்ல மாடு நல்ல ஆடுகள் இருந்தால் அவர்கள் கேட்டு உடனே கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டுமென்று சொல்வார்கள்.

மிர்சாபுரம் ஜமீன்தார்.

கேள்வி:—ஜமீன்தார்களா கேட்கிறார்கள்?

பதில்:—ஜமீன்தார்கள் கேட்டுவிடுவார்கள். கொடுக்காமல் போனால் தொந்தரவு பண்ணுவார்கள்.

கேள்வி:—உங்களிடத்தில் நல்ல மாடு ஆடுகள் இருப்பது எப்படித் தெரியும், ஜமீன்தார்களே பார்த்துக் கேட்கிறார்களா?

பதில்:—ஜமீன்தார்கள் மேல்வீட்டில் இருப்பார்கள். ஒருவன் நல்ல பசு மாட்டையோ காளை மாட்டையோ ஒரு ஆட்டுக்குட்டியையோ தெரு வழியாகக் கொண்டு போகிறான். அவைகளைப் பார்த்தால் கேட்பார்கள், கொடுத்துவிட வேண்டும்.

கேள்வி:— கொடுக்காவிட்டால்?

பதில்:—மேற்சொன்னபடி கஷ்டம் வந்துவிடும்.

A. ரேங்கசாமி ஐயங்கார்.

கேள்வி:—உங்களுக்குப் பொது ஜன உபயோகத்துக்காக ஏதாவது நன்மை செய்திருக்கிறார்களா? ஸ்கூலோ ஆஸ்பத்திரியோ மற்றச் சௌகரியங்களோ செய்து கொடுத்திருக்கிறார்களா?

பதில்:—கோர்ட் ஆப்வார்ட்சில் இருக்கையில்ஆஸ்பத்திரிக்குக்கொஞ்சம் பணம் கொடுத்தார்கள். ஜமீன்தார் வந்தவுடனே ஒருமைனர் ஜமீன்தார் இருந்தார். அவர் ஒரு வருஷம் கொடுத்துக்கொண்டிருந்தார். அவர் இறந்துபோன பிறகு நிறுத்திவிட்டார்கள். வெட்னரிஆஸ்பத்திரிவைத்திருந்தார்கள். அதையும் எடுத்துவிட்டார்கள். பண்ணையையும்எடுத்துவிட்டார்கள்.

கேள்வி:—விவசாயத்தை விர்த்தி பண்ணுவதற்காக நல்ல விதை, மாடுகள், இவைகளை யெல்லாம் வைத்திருக்கிறார்களா?

பதில்:—கோர்ட்ஆப் வார்ட்சில் இருந்தபோது கவர்ன்மெண்டு பண்ணையில் வேலை பார்த்த ஒருவரைக் கொண்டுவந்து கவர்ன்மெண்டுப் பண்ணை மாதிரி நடத்திக் காட்டும்படி சொல்லியிருந்தார்கள். கோர்ட் ஆப் வார்ட்ஸ் போனபின் அதற்கும் இடமில்லை.

கேள்வி:—எல்லாம்கவர்ன்மெண்டு சம்பந்தமாகி, ஜனங்கள் பட்டாதார்களாகப் போய்விட்டால் நல்லது ஏற்படுமென்று சொல்லுகிறீர்களே; ஆகையினாலே ஜமீன்தார் முறையை எடுத்துவிட்டு ஜமீன்தாருக்கு காம்பன்சேஷன் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்லுகிறீர்களா?

பதில்—ஆம். இல்லாவிட்டால் ஒரு கமிஷனரை நியமிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன்.

B. வேங்கடாஜலம் பிள்ளை.

கேள்வி:— ஏன் அலவன்ஸ் கொடுத்துவிட்டால் என்ன?

பதில்:—பொதுஜனங்கள் பேரில் தான் அந்தக் கஷ்டம்வந்து ஏற்படும்.

A. ரேங்கசாமி ஐயங்கார்.

கேள்வி:—ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் ஏதாவது விவகாரம் ஏற்பட்டால் குடிகளிடத்தில் பணம் இல்லாததாலும் மற்ற வசதிகள் இல்லாததாலும் ஜெயம்பெற முடியவில்லையென்று சொல்லியிருக்கிறீர்களே அது என்ன?

பதில்—ஜெயிக்க முடியவில்லை பணமும் மற்ற வசதிகளும் இல்லாததினாலும்.

கேள்வி:—அதாவது குடிகளுக்கு விரோதமாகக் கோர்டுகளில் முடிந்துவிடுகிறதா?

பதில்:—ஊர்க்காரர்கள் 10 பேர்கள் சேர்ந்து ஒரு கேஸ் போட ஆரம்பித்தால் ஆரம்பிக்கும்போது அதில் சில பேர்களுக்கு எதையோ கொடுத்து அந்த ஜனங்களை ஏமாற்றி அந்தக் கேசை போடவிடாமல் நிறுத்தி விடுவார்கள். இல்லாவிட்

அடுத்த பக்கம் பார்க்க

எவ்விதம்?

“பிராமணர்கள் பண்டுதொட்டுத் தமிழைப் பாதுகாத்து” வந்துள்ளனர்.

வித்வான் கி. வா. சகன்னாதன்

1. அகப்பொருள் புறப்பொருள் அமைந்து உலகியலோடு பொருந்த நூல்களியற்றுவதைத் தடுத்து இதிகாச புராணங்கள் இயற்றினார்கள். இயற்றச் செய்தார்கள்.

2. அரசர்களை வயப்படுத்தி, சமஸ்கிருதத்தை அரச அவை மொழியாகச் செய்து தமிழைப் பின்னணிக்குத் தள்ளினர்.

3. ஊர்ப் பெயர்களையும் கடவுள் பெயர்களையும் மக்கட் பெயர்களையும் சமஸ்கிருதமாக்கினர்.

4. கோயில்களில் பாடப்பட்டுவந்த மணிமொழியாம் தமிழ்ப்பாடல்களை நீக்கி தேவமொழியாகும் சமஸ்கிருதத்தை நுழைத்தனர்.

5. சமஸ்கிருதமொழிச் சொற்களைப் பேச்சு வழக்கில் மிகுதியாகப் புகுத்தினர். தமிழ்மொழிச் சொற்கள் மறைந்தன. கன்னடம், தெலுங்கு, மலையாளம், முதலிய புது மொழிகள் தோன்றின.

6. இன்னும் எழுத்தினும் பேச்சிலும் பிராமணர்கள் சமஸ்கிருதச் சொற்களை மிகுதியாகக் கலக்கின்றனர். அதன் பயனால், தமிழ்ச் சொற்கள் மறைந்து வருகின்றன.

7. தமிழ்ச் சொற்களைச் சிதைத்து வருகின்றனர்.

8. தங்கள் தாய்மொழி தமிழ் என்பர். ஆனால் தம் பிள்ளைகளைச் சமஸ்கிருதத்தையே படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவர்.

9. சமஸ்கிருதம் உயர் தனிச் செம்மொழி என்றும், தமிழ் இழிசனர் மொழி (Vernacular) என்றும் கூறுமாறு செய்தனர்.

10. தமிழ் முதல்நூல்களெல்லாம் சமஸ்கிருதத்தின் மொழி பெயர்ப்பென்றும், தமிழ்ப் புலவர்கள் எல்லாரும் பிராமணர்கள் அல்லது பிராமணர்கட்குப் பிறந்தவர்கள் என்றும் கதை புனைந்தனர்.

11. இன்னும் அவர்கள் ஆளுகைக்குட்பட்ட அச்சுக்கூடம் செய்தித்தாள் வாயிலாகச் சமஸ்கிருதச் சொற்களையே தமிழில் புகுத்திவருகின்றனர். இதுதான் பிராமணர்களின் தமிழ்ப் பாதுகாப்பு.

தமிழர்களே! என்ன செய்யப் போகின்றீர்கள்? அவர்களிடத்திலே ஒப்புவித்துவிட்டு தமிழைப் பற்றிய கவலையின்றி இன்னும் அமைதியாக உறங்கப் போகின்றீர்களா? உறங்குங்கள். இன்னும் ஐம்பது ஆண்டில் தமிழ் மொழியை ஏடுகளில் தான் காணுதல் வேண்டும்.—(தமிழன்)

இலக்கியம்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

டால் கேஸ் நடக்கிறபோது சாட்சிகளைக் கலைத்துவிடுவார்கள். அவர்களோடு போராட முடிவதில்லை. மகாராஜா எங்களைப் பட்சமாக நடத்துகிறதில்லை.

பி. வெங்கடாசலம் பிள்ளை.

கேள்வி:— அடக்கு முறையைக் கையாளுகிறார்களென்று சொன்னீர்களே அது என்ன.

பதில்:— சமுசாரிகளிடத்தில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றனவோ அவைகளை எல்லாம் கொடுத்துவிட வேண்டும். அதுதான் அடக்கு முறை.

கேள்வி:- காட்டையெல்லாம் அழித்து விடுகிறார்கள் என்று சொன்னீர்களே அது மாதிரி செய்திருக்கிறார்களா?

பதில்:- அழித்திருக்கிறார்கள்.

கேள்வி:- எந்த காடு என்று சொல்ல முடியுமா?

பதில்:- முடியும். அதாவது உள்ளாற்றுப்பனை, தெரியாற்றுப்பனை, கோம்பைக்காடு, வடகனூற்று.

மீர்ஸாபுரம் ஜமீன்தார்

கேள்வி:- காடெல்லாம் போய் விட்டதா?

பதில்:- மரங்களை யெல்லாம் வெட்டுகிறார்கள்.

பி. வெங்கடாசலம் பிள்ளை

கேள்வி:- ரயட்ஸ் சங்கம் இருக்கிறதா?

பதில்:- இல்லை. இப்பொழுது சாட்சி சொல்வதற்காக ரயத்துகளெல்லாம் கூடி வந்திருக்கிறோம்.

கேள்வி:- அடிக்கடி ஜமீன்தாரை சந்திக்க முடியாதா?

பதில்: அவருடைய மனம்போல் நடக்கிறவர்கள் ஜமீன்தாரைப் பார்க்கலாம். மற்றவர்கள் முடியாது.

மலேயாவில் மே தினம்

சிங்கப்பூர் மே 2,

ஆண்களும் பெண்களுமாக 50,000 சிங்கப்பூர்த் தொழிலாளர்கள்நேற்று அதி விமரிசையாய் மே தினத்தைக் கொண்டாடினர். சிங்கப்பூர் இதற்குமுன் கண்டிராத அளவில் மாபெரும் தொழிலாளர் ஆர்ப்பாட்டமும் அணிவகுப்பும் நடைபெற்றன.

நகர வீதிகளின் வழியே 2 மைல் நீளமுள்ள ஊர்வலமொன்று கொடிகளையும், ஸ்லோக அட்டைகளையும் தாங்கிக் கொண்டு சென்றது. அசம்பாவிதமெதுவும் நிகழவில்லை.

பாரர்பார்க்கில் 2 மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில், எதிர்காலத்தில் மே தினத்தைத் தொழிலாளர்களுக்கு முழுச்சம்பளத்தோடு கூடிய ஒரு பொது விடுமுறையாக அங்கீகரிக்குமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

நாடு கடத்தல், ராஜத்துரோகச் சட்டங்களை ரத்து செய்துவிடுமாறும், சிங்கப்பூர் தொழிற்சங்க சம்மேளனத்தையும் அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தையும் சட்ட பூர்வமான ஸ்தாபனங்களாக அறிவிக்குமாறும் அரசாங்கத்தைக்கேட்டுக் கொள்வதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வேலை நிறுத்தங்களில் போலீஸார் தலையிடுவதையும் வேலை நிறுத்தக்காரர்கள் கைது செய்யப்பட்டு மோசமாய் நடத்தப்படுவதையும் மே தினத்தன்று தொழிலாளர்களுக்கு சம்பளத்தோடு கூடிய விடுமுறையளிக்க மறுக்கப்பட்டதையும் அவர் கண்டித்தார்.

மலாயா யூனியனில்

கோலாலம்பூரில் நேற்று தினம் பலத்த மழை பெய்த போதிலும் மே தினக் கொண்டாட்டம் தடைபட்டு நிற்கவில்லை. அ. ம. தொ. ச. சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலமொன்றில் சுமார் 4000 ஜனங்கள் தெருக்களின் வழியே அணி வகுத்துச் சென்றனர். டெய்லர் ரோடு காற்பந்தாட்டத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மே தினத்தைப் பொதுவிடுமுறையாகப் பிரகடனம் செய்யுமாறு ஒரு தீர்மானம் கவர்னரை வேண்டிக் கொண்டது. மலாயாவிலுள்ள தொழிற் சங்க ஸ்தாபனங்களை மதியாதிருப்பதற்காகச் சர்க்காருக்கெதிராக மற்றொரு தீர்மானம் கண்டனம் தெரிவித்தது.

பினாங்கு, ஈப்போ, ஜோகூர்பாரு முதலிய இடங்களிலும் மே தினம் கொண்டாடப்பட்டது.

(தமிழ் முரசு)

4-ம் பக்கத் தொடர்ச்சி

நடத்துமே, புண்யத்தைத் தேடி அலையும் புருஷோத்தமனாகிய உமக்குத் துளி அன்பு இருந்தால்—குழந்தையிடம்—எவ்வளவு கல்மனம்—

வி:- பரசுராமரே! கோபத்தைக் கிளறுதீர்.

ப:- எவ்வளவு இரக்கமற்ற நெஞ்சு—அரக்கர் கூடக் குழந்தைகளிடம் இரக்கம் காட்டத் தவறியதில்லை. உம்மைப் போல், பெற்ற குழந்தையைத் தவிக்கவிட்டு விட்டு பிரியத்துக்குரியவனைத் தேம்பச் செய்துவிட்டு, இரக்கத்தை மறந்து திரிந்தவர்களை, நான் இந்த ஈரேழு பதினாலு லோகத்திலும் கண்டதில்லை.

வி:- [கோபம் தலைக்கேறியவராய்] ஓய், பரசுராமரே! அளவு மீறிப் போகிறீர்.

நீ:- இருவருந்தான்! இலங்கேசன் பேசவேண்டிய நேரம் இது; உமக்குள் உள்ள தகராறுகளைக் கிளறிக் கொள்ள அல்ல.

இ:- நான், அவர்களைக் குறை கூறவில்லை, நீதிதேவா! இரக்கமற்ற செயலைச் செய்தவர்கள் அவர்கள், என்பதைக் காட்டுவது அவர்கள் மீது கோபித்து அல்ல! அவர்களும் பாபம், நிலைமைக்குக் கட்டுப்பட்டவர்கள் தானே; இரக்கம் கொள்ள முடியவில்லை. அவர்களை எல்லாம் இரக்கமற்றவர், ஆகவே அரக்கர் என்று இந்தக் கம்பர், ஏன் குற்றம் சாட்டவில்லை? இது என் கேள்வி! நான் இரக்கமற்றவன், ஆகவே அரக்கன்—எனவே நான் தண்டிக்கப்பட்டதும், என் அரசு அழிக்கப்பட்டதும், தாம் சம்மதமான காரியம்; என்று கவி பாடினாரே, அதற்குத் தான் இப்போது நான் மறுப்புரை கூறுகிறேன். இவர்கள் இரக்கமற்றவர்கள், மறுக்கமுடியாது. ஏன் இரக்கமற்று இருந்தனர் என்பதற்குச் சமாதானம் கூறுவார்கள்—நான் கூடக் கூறினேன்—என்னை அரக்கராக்கிய இந்த அறிஞரைக் கேட்கிறேன்—இவர்கள் யார்?

அதோ, துரோணச்சாரி!—எவ்வளவு இரக்கமுள்ளமனம், அவருக்கு! மனதாலே, குருவாகப் பாவித்து பதுமை செய்துவைத்து வணங்கிய, வேடர் திலகன் ஏகலைவனை, காணிக்கை கேட்டாரல்லவா, கை கட்டைவிரலை—வலதுகையாகப் பார்த்து—எவ்வளவு இரக்கசுபாவம் இருந்திருக்கவேண்டும்! என்கம்பரே! துரோணர் ஏன் ஆச்சாரியாக்கப்பட்டார், என்னை ஏன், அரக்கராக்கினீர்?

துரோ:- [துடித்தெழுந்து] நான் கேட்டால், அவன் கொடுக்கவேண்டுமோ! நான் வெட்டியா எடுத்துக் கொண்டேன், அவன்கை கட்டைவிரலை?

இ:- அவனுடைய தொழிலுக்கும் வில்வித்தைக்கும் எந்தக்கை கட்டைவிரல் ஆதாரமோ, அதைக் கேட்டீர், காணிக்கையாக. துளியாவது மனதிலே இரக்கம் இருந்தால்கேட்பீரா? அவனாகத்தானே கொடுத்தான் என்று வாதாடுகிறீர். அவன் ஏமாளி அல்ல; உமது கொடுமை காலமுழுவதும் உலகுக்குத் தெரியட்டும், ஒரு கட்டைவிரல் போனாலும் பாதகமில்லை என்று எண்ணினான்.

து:- அவனாகக் கொடுத்தான்—அவனாகவேதான் கும்பிட்டுக் கூத்தாடினான், குருவே, குருவே என்று.

இ:- அந்த அன்பு கண்டு, நீர் உமது குணத்தைக் காட்டி விட்டீர். கட்டை விரலைக் காணிக்கை கேட்ட போது என்ன எண்ணினீர் மனதில். அவன் மறுப்பான்—மறுத்தால் அவனுடன் மல்லுக்கு நிற்கலாம்—கொல்லலாம் என்று சூதாக எண்ணினீர்—துரோணச்சாரியே! அவன் உம்மைத் தோற்கடித்தான். அவன் இழந்தது கைவிரல்—நீர் இழந்தது கண்ணியம் கவனமிருக்கட்டும்—இரக்கமற்ற நெஞ்சடையவர் நீர், என்பதை உலகுக்கு உரைத்தான் அந்த உத்தமன்—சொல்லால் அல்ல—செயலால். அவன் விரல் வெட்டப்பட்டபோது இரத்தம் கொட்டிற்றே, அதைக் கண்டாவது இரக்கம் பிறந்ததோ உமக்கு?

து:- [நீதிதேவனைப் பரிதாபமாகப் பார்த்து] நீதிதேவா! எங்களை வரவழைத்து, அவமானப்படுத்தவே இந்த விசாரணையை நடத்துகிறீரா என்ன? எப்படி இதை நாங்கள் சகிப்போம்?

நீ:- நான் என்ன செய்ய? குற்றவாளி எனக் கருதப்படுபவனுக்கு, தாராளமாகப் பேச நமது மன்றம் உரிமை தந்தாக வேண்டுமே. (இலங்கேசனைப் பார்த்து) இலங்காதிபா! ஏன் இவர்களை ஏசுகிறீர். இவர்களிடம் நம்பிக்கை இல்லை என்று பொதுவாகக் கூறிவிடுமே.

இ:- நீதிதேவா! நான் மறுவிசாரணைக்கு இசைந்ததற்குக் காரணமே, புது உண்மைகள் தெரியச் செய்ய வேண்டும் என்பதுதான்—விடுதலை கோரி அல்ல—எந்தக் குற்றத்தை என் மீது ஏற்றி, என்னை அரக்கராக்கிக் காட்டினரோ, அதே குற்றத்தைச் செய்தவர்கள், மகரிஷிகளாய், ஆச்சாரியர்களாய், ... இதோ .... (கோட்புலியைக் காட்டி) நாயனாராய்—உயர்த்திப் பேசப்படுகிறார்களே, இது சரியா என்று கேட்கிறேன். ஏசி இவர்கள் மனதைப் புண்படுத்த அல்ல. இதோ கொலுவீற்றிருக்கிறாரே கோட்புலி நாயனார் ....

நீ:- ஆமாம், சிவபக்தர்.

இ:- உண்மை—சிவபக்தர் பெரிய போர்வீரர் கூட—இன்று நாயனார் ....

க:- செந்தமிழில் சேக்கிழார் ....

இ:- செய்திருக்கிறார் பல செய்யுட்கள்; இவருடைய சீலத்தை விளம்பரப் படுத்த.

கோ:- ஈசா! யானோ விளம்பரம் தேடுபவன்? கைலைவாசா! ஏனோ இந்த துஷ்டசிகாமணி என்னை ஏசக்கேட்டும், உன் நெற்றிக்கண்ணைத் திறந்திடக் கூடாது ....

இ:- ஐயன், வேறு ஏதேனும் அவசர அலுவலிலே ஈடுபட்டிருக்கக் கூடும்—அடியவரே! பிறகும் [illegible] செய்து கொள்ளும்.

நீ:- சரி, சரி, ... இந்த இலங்கேசனா கோர்ட் நடத்துகிறார்?

இ:- இல்லை, தேவா! குற்றவாளிக் கூண்டிலுள்ள நான் என் குறையைக் கூறிக் கொள்கிறேன். வேறொன்றுமில்லை. ஐயா! கோட்புலியாரே! நீர்ஓர் கொலைபாதகரல்லவா!

கோ:- [காதுகளைப் பொத்திக் கொண்டு] சிவ; சிவ! [illegible] கொடுமொழி புகல்கிறான்—கேட்டுக்கொண்டிருக்கிறீரே, தேவா.

வி:- [கோபித்து எழுந்து] நன்று, நன்று நீதிதேவா! கோட்புலிக்காக மட்டும் இரக்கம் காட்டுகிறீரோ—இதுதான் நியாயமோ! இலங்கேசன், நாங்கள் இரக்கமற்றவர்கள் என்று விளக்குவதற்குப் பல கூறினது போல, கோட்புலி பற்றியும் கூறட்டுமே. நாயனுக்கு மட்டும் பாதுகாப்போ? நாங்கள் [illegible]!

நீ:- பொறுமை, பொறுமை. இலங்கேசன் இஷ்டம்போல பேசட்டும். கோட்புலியாரே! பதில் கூறும்.

கோ:- நானா? இவனுக்கா! நாதனின் நல்லருளைப் பெற்ற நானா! முடியாது ....

(16-ம் பக்கம் பார்க்க)

புதிய ஏகாதிபத்யம்

—கடற்படை

மற்றநாடுகள், கடல் கடக்க அஞ்சிய நாட்களிலே மறத்தமிழர், கடல் கடந்து சென்று வாணிபம் செய்தனர், யவனர் முதலியதொலைதேயங்களுடன் என்று இலக்கியம் கூறுகிறது.

இன்றைய புள்ளிவிவரம் கூறுவது என்ன? கடல் கடந்த, காகுத்தனின் தூதனின் கதை படித்து, தமிழர்கை கூப்பி நிற்க, வடநாட்டு வாணிபர்கள், வலையை எங்கும் வீசி, இலாபத்தைக்குவிக்கின்றனர் என்ற செய்திதான்.

திராவிடத்தின் செல்வத்தைச் சுறண்டும், வடநாட்டு வணிக வேந்தர்களின், பணபலம், தொழில்பலம், இவற்றினுக்கு அரணாக அவர்களுக்கு அமைந்துள்ள அரசியல் செல்வாக்கு, ஆகியவற்றைக்கண்டால், எவ்வளவு வேகமாக, புதியதோர்பொருளாதார ஏகாதிபத்யம் உருவாகிக்கொண்டு வருகிறது என்பது விளங்கும். வடநாட்டவர் இங்கு ஆலை அரசர்களாய் பணத்தோட்டக்காவலராய் இருப்பதுடன், கடல் வியாபாரத்திலும் அவர்களே இன்று மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளனர்.

கப்பலோட்டிய தமிழனின் நாட்டிலிருந்து இன்று தோட்டத் தொழிலாளி செல்கிறான், மண்டபத்திலிருந்து கிளம்பி, மாரிஸ் தீவுக்கு. இந்நாட்டுப் பொருளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவும், வெளிநாட்டுப் பொருளை இங்கு இறக்குமதி செய்யவும், ஏற்பட்டுள்ள, கடல்வியாபாரிகள், யார்? பெரும்பாலும், வடநாட்டவர்களே! திராவிடத்திலே வடநாட்டு வணிக வேந்தர்கள் முகாம் அமைத்துக்கொண்டு, இங்குள்ள ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்வைத்துக்கொண்டுள்ளனர். செல்வாக்குள்ளதும், வெளி உலகத் தொடர்புக்கு ஏற்றதுமான, இந்தக் கடல் வியாபாரத்துறையிலே தமிழர்களிலே, குறிப்பிடத்தக்க அளவினர் இல்லை. வடநாட்டினரே பெரும் அளவினர். அவர்களிலே சிலருடைய பெயர்களை மட்டும் இங்கு தந்திருக்கிறோம், நம் நாட்டு வளம், எங்கு 'அடகு' வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்கும் நோக்கத்துடன். இங்குவடநாட்டவர் பெற்றுள்ள இத்தகைய ஆதிக்கம், அந்த ஆதிக்கத்திலே ஆயிரத்திலோர் பாகம், இங்குள்ள திராவிட வாணிபர்களால், வடநாட்டிலே பெறமுடிகிறதா, பெற்று இருக்கிறார்களா என்பதைக் காங்கிரஸ் தமிழர்கள். எண்ணிப்பார்க்கவேண்டுகிறோம்

ரூப்சந்துகளும், ஜீவன் லால்களும், ஷிவ் நாராயணகளும் மூல்சந்துகளும், சென்னையில் முகாம் அமைத்துக்கொண்டு நிலக்கடலை முதற்கொண்டு வைரம்வரை, சகலவிதமான பொருள்களையும், ஏற்றுமதியோ இறக்குமதியோ செய்யும் வசதி பெற்றிருப்பதுபோல, இங்குள்ள தனபாலர், அண்ணமலை, ஆறுமுகம், முதலியோருக்கேனும், வடநாட்டிலே, இடம் இருக்கிறதா என்பதை எண்ணிப்பாருங்கள். பொருளாதாரப்பிடி எவ்வளவு பலமுள்ளதாக இருக்கிறது என்பதை விளக்க, கோடிக்கணக்கிலே வியாபாரம் செய்யும்—கடல் வியாபாரம் செய்யும்—திராவிடத்தில் இருந்துகொண்டு செய்யும், வடநாட்டு வணிகர்களில் குறிப்பிடத்தக்கவர்களின் பெயர்வரிசையைத்தந்துள்ளோம்—கருத்தூன்றிப்படித்துவிட்டுப் பிறகு — கூறக்கூடவேண்டாம் - திராவிடநாடு திராவிடருக்கே என்றதிட்டம் தேவையா அல்லவா என்பதுபற்றிச் சிந்தியுங்கள். தேயிலைத்தோட்டத்திலேஉடல் தேய, உளம் தேயப் பாடுபடும் தமிழனையும் மனக்கண்முன் நிறுத்தி பக்கத்திலே வடநாட்டிலிருந்து இங்கு வந்து வாழும் மார்வாரி, குஜராத்தி, மூல்டானின் வணிகர்களின் உருவங்களையும் நிறுத்திப்பார்த்து, யோசியுங்கள், திராவிட நாடு திராவிடருக்கு என்ற திட்டம் தேவையா அல்லவா, என்பதை.

திராவிடநாட்டிலே உள்ள வடநாட்டு, கடல் வியாபாரிகள்

1. கிஷின்சந்த் செல்லாராம்
2. ரிஷபதாஸ் அமிர்தலால்
3. J. குஷால் தாஸ்
4. அரிபிரசாத்
5. ஷா ரிக்பதாஸ் சக்னராஜ்
6. போகன்லால் ரூப்சி ஷா
7. ஷா திலக்சந்த் பூசாஜி
8. செல்லாராம் கியான் சந்த்
9. ஷா ஓபாஜி ஹேம் சந்த்
10. ஜெத்மத் ஸ்ரீ குஷ்ராஜ்
11. ஷா ரிக்பதாஸ் ஹால் சந்த்
12. ஜக்ரூப்ஜீ சங்கர்லால்
13. சோபாஜி ஸ்டேசிமல்
14. ஷா பான்மல் சோவான்மல்
15. ஷா ஜக்ரூப்ஜீ சுப்ராஜ்
16. பாட்லிபாய்
17. சகன்லால் பாக்டி
18. ஷா நிர்பாயிலால் பகதூர் மல்
19. குஜராத் காமர்ஸ்
20. சோஹாஜி சேஷ்மல்
21. ஜீவன்லால்
22. பூன்ஜா தாக்கர்சி
23. பரேக்
24. அமார்சந்த் சோபாசந்த்
25. ஹஜாரிமல் ஜெவ்ராஜ்
26. சப்லானி
27. ஷா தன்ராஜ் காந்திலால்
28. ஹஜான்மல் பூக்ராஜ்
29. கிருஷ்ராஜ் & Co
30. வானிசந்த் பெயுஸ்மால்
31. ஷா தொாஜி ராம்லால்
32. சேட் சிவநாராயண்
33. ஜாபே Co
34. மூல்சந்த் ஜெய்கிருஷ்ணதாஸ்
35. ஹஜாரிமல் பூக்ராஜ
36. ஷா ஹஜாரிமல் ஜீன்ராஜ்
37. கேவல்ராம் செல்லாராம்
38. காலி கொத்வாலா
39. ஷா பாஸ்மல் மூல்சந்த்
40. ஷா பூடாஜி பாபுத்முல்
41. ஷா ஜகன்ராஜ் சாமர்மல்
42. ஷா பாலிசந்த் மூல்சந்த்
43. ஷா ஹீராஜி வாணிசந்த்
44. ஷா மூல்சந்த் மிததா லால்
45. ஷா மகாஜி சாவிமல்
46. ஷா குலாப்சந்த் மோகன்லால்
47. ஷிவசந் ஜடன்லால்
48. ரூப்சந்த்
49. மிஸ்ரிமல் S. V.
50. சம்பாராஜ் R
51. H. மிஸ்ரிமல்
52. சாரிமல்
53. காஸ்தார்ஜி
54. காணிசந்த்
55. கணேஷ்மல்
56. ஜிலானி
57. ஷா இந்துமல் தாலிசந்த்
58. அத்வானி

அடுத்த பக்கம் பார்க்க

"வேலைக்காரி" நாடகத்திற்கு

கிருஷ்ணன், பாகவதர் விஜயம்

தஞ்சை மே 1.

இன்று இரவு 9 மணிக்கு இசை மணி M. K. தியாகராஜ பாகவதரும், நகைச்சுவை அரசர் N.S. கிருஷ்ணன் அவர்களும், கும்பகோணத்திலிருந்து இவ்வூரில் கிருஷ்ணன் நாடக சபையார் நடத்தும் "வேலைக்காரி" நாடகத்தையும், நாடகசபைக் குழுவினர்களையும் காணத்திடீரென விஜயம் செய்தனர். நாடகத்தின் இடையில் கலைஞர்கள் இருவரும் மேடையில் தோன்றியவுடன் நாடகம் காண வந்த ஆயிரக் கணக்கான மக்கள் மகிழ்ச்சியால் பெரும் ஆரவாரம் செய்தனர். பின்னர் சபையின் சார்பில் திருச்சி K. A. P. விஸ்வநாதன் அவர்கள் கலை மணிகளை வரவேற்று மாலைகள் சூட்டினார். வரவேற்புக்கு நன்றி செலுத்துகையில், இசைமணி பாகவதர் அவர்கள் பேசியதாவது.

நாங்கள் இங்கு எதிர்பாராதவிதமாகவே இப்போது வந்தோம். திரு. K. R. ராமசாமி அவர்கள் எங்களுடைய விடுதலைக்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு நாளும் மக்களுக்கு நினைவூட்டி வந்திருக்கிறார். தன்னாலான உதவிகளையும் செய்தாரென்று எனக்குச் சிறையில் பலர் கூறக்கேட்டிருக்கிறேன். மேலும் இந்நாடக சபையிலுள்ள ஒவ்வொரு நடிக குழந்தைகளும் எங்களுடைய விடுதலைக்காக தனித்தனியே காத்துக்கொண்டிருந்தனர் என்றும் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால்தான் இக்குழந்தைகளை யெல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை என்னை இங்கு கொண்டுவந்து சேர்த்தது. பின்னர்,

நகைச்சுவை அரசர் தனது சிறை வாழ்க்கையைப் பற்றிப் பேசும்போது, சிறையில் உணவு கொடுக்கும் முறையை சொல்லுகையில் "காலையிலே எழுந்திரிச்சு கஞ்சி தண்ணி இல்லாமெ கஷ்டப்படுகிறேனே கடவுளே" என்று நான் ஒரு படத்தில் பாடியிருக்கிறேன். ஆனால் சிறையிலோ "காலையிலே எழுந்திருச்சி கஞ்சி தண்ணி குடிக்கச் சொல்லி கஷ்டப்படுத்துராங்க கடவுளே" என்று பாடும்படி நேர்ந்தது என்று கூறினார்.

நாடக சபையைப்பற்றிக் கூறும்போது இந்நாடகசபை கிருஷ்ண நாடக சபையல்ல. கிருஷ்ணன் நாடகசபை என்று பெயரிட்டிருப்பதிலிருந்து என்மீதுள்ள அன்பால் இது என்பெயரால் தான் நிறுவப் பெற்றிருக்கிறதென்றே நிச்சயமாய் நம்புகிறேன். நான் சிறையினின்றும் வந்தவுடனேயே இங்கு வந்திருக்க வேண்டும். ஆனால் பல அலுவல்களின் காரணமாக வரமுடியவில்லை. இச்சபையின் நிர்வாகிகளும், நடிகர்களும், மற்றத் தொழிலாளர்களும் பொறுத்துக் கொள்வார்களென எண்ணுகிறேன். ஆனால் இந்தவருவேனென்பது எனக்கு ஒரு மாதத்திற்கு முன்பே தெரியும். பாகவதருக்குத் தெரியாது.

இந்த ஊரில் சாதாரணமாக நாடக கம்பெனிகள் பெரும் நஷ்டமடைந்து அடுத்த ஊர் செல்லமுடியாது திண்டாடுவதுதான் வழக்கம். ஏன் இதைச் சொன்னேனென்றால் நான் இருந்த கம்பெனியும் அதே நிலைதான் அடைந்திருக்கிறது. ஆனால் அதற்கு மாறாக இந்தக் கிருஷ்ணன் நாடகசபை ஒருவருடத்திற்கு மேலாக நடை பெறுவதிலிருந்தே இதனுடைய பெருமை நன்கு தெரியும். இந்த "வேலைக்காரி" நாடகத்தை நான் பலமுறை படித்திருக்கிறேன், ஆனால் நடித்ததில்லை. நன்றாக இருக்கும். இப்போது நான் சென்னைக்கு படப்பிடிப்புக்காகச் செல்வதால், நாடகத்தின் முடிவு வரை இருக்க முடியவில்லை.

இன்னும் பதினைந்து நாட்களில் நானும், பாத்வதரும் வருகிறோமென்று கூறி எல்லோருக்கும் தனது நன்றியையும் வணக்கத்தையும் சொல்லி விடை பெற்றுக் கொண்டார்.

முடிவில் சபையின் சார்பில் நன்றி கூற உடனே காரில் கலைமணிகள் திருச்சி சென்றனர்.

14-ம் பக்கத் தொடர்ச்சி

59. ஜெவால்கர்
60. ஜுலாசி தாஸ்
61. பன்னுலால் ராம்குமார்
63. சன்ராய் உத்தம்சந்த்
63. ராஜுமல்
64, ஷங்கர்லால்
65. ஜெய்பால்
66. ரசிக்லால் &Co
67. ஹிந்தர்மல்.
68. மங்கிலால்
69. கோம் ராஜ்
70. பீக்கம் சந்த்
71. ஹஸ்த்தியல்
72. கேம் சந்த்
73. மிஸ்ரிமல் ப்ஞராஜி
74. ஜீவராஜ்
75. மகான்லால் S. B.
76. V. பான்ஸ்மல்
77. இந்தர் மல்
78. ஆதிதன்மல் S. R.
79. சம்மர்மல் V
80. கின்சந்த்
81. மாஞ்ச் லால்
82. பாவார் வால்
83. பூர்மால்
84. ரூப்சந்த்
85. சந்தான்மல்
86. ஹஸ்த்திமல்
87. தாலாக் சந்த்
88. தாக்ஜீ
89. பான்மல்
90. ஷா மூல்சந்த் ஆசுராம்.

"தோழன்"

(சிறந்த தமிழ்ப் பத்திரிகை)

ஆசிரியர்

A, P. ஜனார்த்தனம், M. A.

ஜுலையில் வெளிவரும்

விவரங்கட்கு:—

"தோழன்"
10, வேளாளர் தெரு.
புரசைவாக்கம், சென்னை.

பாக்கிஸ்தானை வளமாக்க

டாவுத்போரா வகுப்பு முஸ்லிம்களின் குருவான ஷாஜாதா யூசுப் நஜ்முதீன், 10 லட்சம் பவுனுக்கு இங்கிலாந்தில் இயந்திர சாமான்களை வாங்க நிச்சயத்திருக்கிறார். பாக்கிஸ்தானை வளமாக்க அவை உபயோகப் படுத்தப்படுமாம்.

13-ம் பக்கத் தொடர்ச்சி

இ :- எப்படி முடியும் என்றுகேட்கிறேன். ஒரு செல்வவான், மூன்றடுக்கு மாடிமீது உலவுகிறான், அவனைக் கண்டோர் அறிவார்களா, அவன், வஞ்சனை, பொய், களவு, எனும் பல படிக்கட்டுகளை ஏறித்தான், சுகபோகம் தரும் அந்த மூன்றும் மாடிக்கு வந்தான் என்பதை. இல்லையல்லவா! அதுபோலவேதான், இதோ இங்கு நாயனாராகக் காட்சி தரும் இந்தக் கோட்புலி, பிணங்களின் மீது நடந்து, இங்கு வந்து சேர்ந்தவர்.

கோ :- பித்தமோ? அன்றி, வார்த்தைகள் யாவும் வெறும் சத்தமோ?

இ :- கோட்புலியாரே! நீர் ஓர் சிவபக்தர்தானே?

கோ :- ஆம்! அதற்கும் தடையோ. அரனடியானே யான்.

இ :- அறிந்தே கேட்டேன் அடியவரே! சிவபக்தியால் நீர் செய்தது என்ன? கோயில் கோயிலாக ஓடினீர் — அருள் கிடைத்தது — அதை அல்ல நான் கேட்பது. ஒரு காலத்தில் உமது மாளிகையிலே, ஏராளமாக நெற் குவியல் சேகரித்து வைத்திருந்தீரே....

கோ :- ஆ .... மா .... ம்
அது .... வா.

வி :- ஏன், இழுத்துப் பேசுகிறீர். பொருள், களவோ?

இ :- இல்லை, முனிவரே! அவ்வளவு சாமான்யமானகுற்றத்தையா இவ்வளவு பெரியவர் செய்வார். நெல்இவருடையதே. கோயிலுக்கு என்றுசேகரித்து வைத்திருந்தார். ஒரு சமர். அதற்காக ஊரை விட்டுச் சென்றார்—கடுமையான பஞ்சம் ஊரிலே அதுபோதுஏற்பட்டது. அதன்கொடுமை தாங்கமாட்டாமல், மக்கள் ஏராளமாக மடியலாயினர்.

நீ :- அதற்கு இவர் என்ன செய்வார்?

வி :- ஏன், சிவபக்தர், பஞ்சத்தைத் தடுத்திருக்கக் கூடாது என்று கேட்கிறார் இலங்கேசன்?

இ :- இல்லை, இல்லை, அவ்வளவு பெரிய காரியத்தை நான் எப்படிஇவரிடமிருந்து எதிர்பார்ப்பேன். நான் சொல்வது வேறு அந்தப் பஞ்சம், இவருடைய பண்டகசாலையில் தேக்கி வைக்கப்பட்டிருந்தஉணவுப்பொருள் கிடைத்தால் தலைகாட்டி இருக்காது. மக்கள் மடியமாட்டார்கள். பிணம் கீழே வீழ்ந்தது—இவர் கிடங்கிலே நெல்மூட்டைகள் ஏராளம். உணவுக்காக வெளியே திண்டாட்டம் — உள்ளே நெல் குவியல் குன்றுபோல.

நீ :- விவரம் குறைத்து...........

இ :- விஷயத்தைக் கூறுகிறேன். பஞ்சத்தில் அடிபட்ட மக்கள்,கிடங்கிலிருந்து உணவுப் பொருளை எடுத்துக்கொண்டனர்.

கோ :- (கோபமாக) என் உத்தரவின்றி—நான் ஊரிலில்லாதபோது—

> **கடவுள் உண்டா இல்லையா அதுபற்றி கவலையில்லை. அருள் தோன்று மிடமொன்று இருக்க வேண்டுமல்லவா? அது உயிரிலிருந்துதானே தோன்ற வேண்டும்! அதனைத்தான் கடவுள் என நாங்கள் அழைக்கிறோம்.**
>
> **மறைமலை அடிகள்**

சிவகாரியத்துக்கென்று இருந்த என் செந்நெல்லைக் களவாடினர்.

இ :- களவு அல்ல! பகிரங்கமாகவே எடுத்துக்கொண்டனர்,—எண்ணற்றமக்களின் உயிரைக்காப்பாற்ற —பிறகு தந்து விடுவோம் என்று எண்ணி.

கோ :- கொள்ளை அல்லவா அது?

இ :- கிடங்கிலே நெல்லை, பஞ்சகாலத்திலே குவித்துக்கொள்வது?

நீ :- அதுவும் குற்றந்தான்.

இ :- இதற்கு நீர் செய்ததென்ன? கோட்புலியாரே! அன்பே சிவம்! சிவமே அன்பு— அந்தச்சிவத்துக்கு நீர் அடியவர்—அடியாரே! பட்டினிப் பட்டாளம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நெல்லை எடுத்துக்கொண்டனர். சிவத்தொண்டராம் தாங்கள் என்ன செய்தீர்?

ப :- நியாயமான கேள்வி? நானுவது, என் தகப்பனாரின் சொல்லைக் கேட்டுதாயின் தலையை வெட்டினேன்—கோட்புலி செய்தது எனக்கும் கேள்விதான். ரொம்ப அக்ரமம் ஈவு இரக்கமற்ற செயல்.

இ :- அதுதான்முக்கியம். இரக்கமற்ற செயல். சிவசொத்து, அந்த நெல். அதை யார் தின்றார்களோ அவர்களெல்லாம் சிவத்துரோகிகள். சிவத்துரோகிகளின் சிரத்தை வெட்டாது விடேன் என்று சீறினார் இந்தச்சிவபக்தர் .... இல்லையா கோட்புலியாரே? சீறினார் — சீவினார் தலைகளை-

ப :- பலரைச்சிரச்சேதம் செய்தார். மகாபாபம்! ரொம்ப அக்ரமம்! நான் தாயைமட்டுந்தான் கொன்றேன்—அதுவும் தகப்பன் பேச்சைஎப்படித் தட்டி நடப்பது என்றகாரணத்தால்.

இ :- இவருக்கு யாரும் கட்டளையிடவில்லை தலைகளைச் சீவச் சொல்லி! கொன்றார், கொன்றார், ஆண்களையும்பெண்களையும்கொன்றார், இரக்கம் துளியுமின்றிக் கொன்றார்-பதைக்கப் பதைக்கக் கொன்றார்—வேண்டினர், கொன்றார்,காலில்வீழ்ந்தனர், கொன்றார் — கொன்று தீர்த்தார் சகலரையும்-தேவா! குற்றவாளி என்று என்னைக் கறைப்படுத்தியகம்பரே! இவர் செய்தார் இக்கொடுமை. விசாரணை உண்டா? இல்லை. குற்றமே சாட்டவில்லையே!! குற்றம் சாட்டாதது மட்டுமா, இத்தனைகொலைகளைத்தன்பொருட்டுசெய்தாரே, இந்தப்பக்த சிகாமணிஎன்று மகிழ்ந்து, கைலைக் குன்றிலுள்ளமுக்கண்ணன், இவருக்கு அருள் பாலித்தார்.

நீ :- கொடுமைதான்

இ :- அதுபோது, உயிருக்குப் பயந்து அந்த மக்கள் எவ்வளவு கெஞ்சி இருப்பர்-கோட்புலியாரே! எம்மைக் கொல்லாதீர்-உமதுகாலில்

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hougsonpet Conjeeveram.